121

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்3ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.


பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 18 ] ப்ரபவ ஹூ, மாசி மீ [ஸஞ்சிகை 5


த்ரிபு4வநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌ3ரவராம்ப3ரம் த3தா4நே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்3ஜம் விஜயஸகே2 ரதிரஸ்து மே(அ)நவத்3யா

['ஸ்ரீ பாகவதம். 1-9-23]

## ஆழ்வாருடைய அநுபவ ப்ரகாரம்


(ஸ்ரீ: உப. வித்வான் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி.)


ஆழ்வாருடைய பெருமைக்கு ஹேதுக்களான அநுபவ ப்ரகாரங்கள் நிரூபிக்கப்படுகின்றன. கர்ஷகனானவன் தன்னுடைய க்ஷேத்ரத்தில் அஸாரமான அம்சத்தைப் போக்கி, எரு முதலான உரங்களை இட்டு, நீரைப் பாய்ச்சித் தகுந்த காலங்களில் தகுந்த விதைகளை விதைத்துப் பயிரை உண்டாக்கி, நாள்தோறும் உண்டாகிற அதன் செழுமையை 'ஸாயம் ப்ராத: க்ஷேத்ரமுபைதி' என்கிறபடியே திகழும் பார்த்துகந்து, பயிர்த்தலையில் குடில் கட்டிக்கொண்டு ரக்ஷித்துப் பல காலத்தை ப்ரதீக்ஷித்து, பலித்தவாறே பதர் போக்கித் தாந்யத்தை ஸங்க்ரஹித்துத் தண்டுலமாக்கிப் பாகம் பண்ணி, ஷட்ரஸயுக்தமாக்கித் தானும் தன்னுடைய பரிகரமும் புஜித்து த்ருப்தனுமாப்போலே, 'பத்தி யுழவ' னென்றும், 'தம் த்வாம் க்ஷேத்ரக்ருஷீவலம்' என்றும், 'வ்ருஷ்டிஸேசந க்ருஷீவலம் யதோதி' என்றும் சொல்லுகிறபடியே ஸர்வேச்வரனுகிற க்ருஷீவலன், 'நெஞ்சைப் பெருஞ் செய்யுள்' என்கிறபடியே ஆழ்வாருடைய திருவுள்ளமாகிற க்ஷேத்ரத்தில், 'என்னைத் தீமனங் கெடுத்தாய்' என்கிறபடியே அஸாராம்சத்தைப் போக்கி, 'ஊரவர் கவ்வை எருவிட்டு அன்னை

சொல்நீர்படுத்தி'என்கிற பாசுரத்தின்படி ஆழ்வாருக்கு உண்டான அதிசயித பகவத் ப்ராவண்யத்தைக் கண்டு பழியாகப் பேசுகிற ஊரார்களுடைய உக்தியைப் பகவத் விஷயஸ்மாரகதயா வர்த்தக மாகையாலே எருவாக இட்டு, தாயாராகிற உபாயாத்யவஸாயத்தினுடைய தசையில் பேசும் பேச்சை நீராகப் பாய்ச்சி, ஸங்கமாகிற விதையை விதைத்து, அது காமமாகிற அங்குராவஸ்தையைப் பஜித்தபின், 'காரமர் மேனி' என்கிறபடியே தன்னுடைய திருமேனியாகிற காளமேகத்தினுடைய ஸௌந்தர்யமாகிற அம்ருதத்தை வர்ஷித்து, அதனால் விளையும் பரபக்தி முதலான அவஸ்தைகளைக் கண்டு க்ருப்தனுப் 'வ்ருஷ மௌநௌம' என்கிறபடியே உந்நத ஸ்தலமான பரண்போலேயிருக்கிற திருமலை முதலான திவ்ய தேசங்களில், 'நின்று மிருந்துங் கிடந்தும் திரிதந்தும்' என்கிறபடியே பஹுப்ரகார விசிஷ்டனுப்க்கொண்டு ரக்ஷித்துப் பல காலத்தை ப்ரதீக்ஷித்துப் பலித்தவாறே பலபூத பக்தி விசிஷ்டரான ஆழ்வாரைத் துஷ்ஸ்தாரீயமான சரீரத்தைப் போக்கி, 'ஸஹஸஹ' என்கிறபடியே அங்கமாக்கி, ஷட்குணங்களாகிற ஷட்ரஸங்களோடு சேர்த்துத் தானும் அநுபவித்து, 'அடியார்க் கென்னை யாட்படுத்த விமலன்' என்கிறபடியே தன்னடியார்களையும் அநுபவிப்பித்து க்ருப்தனுதும் படியைக் கண்டு 'வாரிக்கொண் டுன்னை விழுங்குவன் காணில்' என்கிற பாசுரத்தின்படி ஸர்வேச்வரனைக் காணில் முற்றாட்டாக அநுபவிப்பன் என்று இவர் பாரிக்க, பூர்வஜ னுகையாலே இவர்க்கு முந்தியே அத்யபிநிவேசத்தோடே அநுபவிப்பதாகப் பாரிக்கிற அவனுடைய படியைக் கண்டு, 'இதொரு நீர்மை யிருந்தபடி என்?' என்று ஈடுபட்டு நீர்ப் பண்டமாக உருக, அந்த அவஸ்தா விசிஷ்டமான இவரை, 'தானென்னை முற்றப் பருகினன்' என்கிறபடியே அநுபவித்து க்ருதார்த்த னுகிறுன். அங்ஙன மன்றிக்கே காமுகனுனவன் தனக்கு அபிமத விஷயமான காமிநிக்கு அநேக அலங்காரங்களைப் பண்ணி அந்த அலங்காரங்களோடே கூடின அவளை யதா மநோரதம் அநுபவித்து க்ருதார்த்தனுக, அதைக் கண்டு காமிநீ உகக்குமாப்போலே, ஈச்வரன் தன்னை அநுபவிக்கக்கண்டு தானுகக்கும்படியும் உண்டு. இந்த விஷயத்தை 'ப்ராஜ்ஞேநாத்மநா ஸம்பரிஷ்வக்த:' என்றும் 'யதா ஸ்த்ரியா ஸம்பரிஷ்வக்தயோஷா ஜாயேவ ப்ரியம்' என்றும் ச்ருதி சொல்லிற்று. 'ஸம்பரிஷ்வக்த:' என்று பரிஷ்வங்கத்தைச் சொல்லிய ச்ருதிக்குக் காமுக காமிநீ பாவ த்ருஷ்டாந்தத்தில் நோக்கு.

இப்படி யிருந்துள்ள அதிசயிதமான பக்தி ரூபாபந்ந ஜ்ஞாநம் 'வேம்பின்புழு வேம்பன்றி உண்ணாது' என்கிறபடியே ஸ்வரூப ப்ரயுக்தமா யிருக்கும். ஸமஸ்த கல்யாண குணாத்மகனான ஸர்வேச்வரனை விஷயீகரித்திருப்பதால் அது குணக்ருதமாயு மிருக்கும். இந்த விஷயம் 'யதூ்யேவைஷ ஏவைஷ ஆநந்தயாதி' என்கிற விடத்திலும், 'ரஸோ வை ஸ: ரஸம் ஹ்யேவாயம் லப்த்வா' என்கிற

விடத்திலும் வ்யக்தம். இப்படி யிருந்துள்ள பக்தியானது கரை புரண்டிருப்பதால், கரை புரண்ட ஆறானது பல ஆறுகளாயும் பல வாயத்தலைகளாயும் ப்ரவஹித்துத் தானுங் குறையாமல் கடலில் புகுமாப் போலே, மகள் தாய் தோழி என்கிற பல அவஸ்தைகளை அடைந்து கடலிடங் கொண்ட கடல் வண்ணனை அவகாஹிக்கும். அன்றிக்கே 'அஹேதுகோ யஸ்யாஸ்வேஷாயம்' என்கிற ஆத்ம வஸ்துவை 'ஈரும் வேமென தாருயிர்' என்கிறபடியே சேத்யமாகவும் தாஹ்ய மாகவும் பண்ணும். 'உடலம் நின்பா லன்பாயே' என்கிறபடியே அசேதநமான சரீரத்துக்குச் சேதந தர்மமான அன்பை யுண்டாக்கியும், கரணங்களைச் சேதந ஸமாதியை அடைந்து விடாய்த்துக் கரணாந்தரத்தினுடைய வ்யாபாரத்தை விரும்பப் பண்ணியும், கரணியான தன்னைக் கரணங்களுடைய வ்யாபாரத்தை அடைய விரும்பப்பண்ணியும், க்ஷாம காலத்தில் தரித்ரனாய் பஹு ப்ரஜனான குடும்பி தானும் தன்னுடைய ப்ரஜைகளும் பசியால் நொந்து விடாய்க்குமாப் போல் பகவதநுபவாலாபத்தாலே தம்மையும் கரணங்களையும் விடாய்க்கும்படி பண்ணியும், நியத ஸ்வபாவங்களான காற்று கடல் கழி முதலானவைகளைப் பகவதநுபவாலாபத்தால் நோவு படுகிறவையாகக் கொண்டு அவைகளோடு தம்மைக் கட்டி யழும்படி பண்ணியும் போருகையாலே இவருடைய பெருங் காதலான பக்தி நித்ய முக்த முமுக்ஷுக்களில் ஒருவருக்கு மில்லாமையாலே அத்யந்தம் விலக்ஷணமா யிருக்கும். இப்படி இருந்துள்ள ஆழ்வார், பகவத் விஷயத்தில் அவகாஹித்த எல்லார் படியு முடையரா யிருப்பர். இதில் அவாந்தர நிரூபணத்தை விஸ்தர பயத்தாலே நிறுத்தினேன்.

இனி, ஆழ்வாருடைய அநுபவ விசேஷங்களில் சில அநுபவங்கள் திங்மாத்ரம் நிரூபிக்கப் படுகின்றன. திருவாய்மொழியில் ஒவ்வொரு தசகத்திலும் ஒவ்வொரு குணங்களும் அநுபூதங்களாய், அந்த அநுபவ பரீவாஹ ரூபமாகப் பாசுரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றில் முதல் திருவாய்மொழியில் பகவானுடைய பரத்வத்தை அநுபவித்தார். இரண்டாவது திருவாய்மொழியில் அவன் பஜநீய னென்றார். மூன்றாம் திருவாய்மொழியில் அவனுடைய ஸௌலப்யத்தை அநுஸந்தித்தார். அவதாரங்களில் க்ருஷ்ணாவதாரம் ஸௌலப்யத்துக்கு எல்லை நிலம். அது தன்னிலும் தூத்ய ஸாரத்யங்கள் பரத்வ மென்னலாம்படி வெண்ணெயைக் களவுகண்டு மறைக்க முடியாமலும், யசோதையாலே உரலோடு சேர்த்துக் கட்டபட்டு ப்ரதிக்ரியை பண்ண முடியாமலும் ஏங்கிப் படும் எளிவரவை அநுஸந்தித்து மிகவும் ஈடுபட்டு இளமணல் பாய்ந்து ஆறு மாஸம் மோஹித்தார். இப்படியே சுக ப்ரஹ்மர்ஷி 'தெ௨ம விரிஂசொ ந ஹவ:' என்று ஈடுபட்டார். குந்தீ, 'மொவஸூாஃதெ ஷயி கூ௰தா மஸி ஷா௨ தாவகூ' என்று ஈடுபட்

டாள். ஆழ்வானும், அதிமாநுஷ ஸ்தவத்தில், 'ஸ்வாத்மந்யேவ மஹிமாநம் அவஹத் பரம் யசோதா' என்று துடங்கி, 'தாத்ருசே மதயதீவ சாருதா ஜநதா ஹ்ருதயஹரம் தே' என்று ஈடுபட்டார்.

'அஞ்சிறைய மடநாரை'யில், கீழ்க்கிடைத்த அநுபவம் ஸாத்மிக்கைக்காக அவன் வரவு தாழ்க்க, அத்தால் விடாய்த்துத் தாமான தன்மை மாறி, நாயிகாவஸ்தையைப் பஜித்து, கடகர்களான ஆசார்யர்களை நாரை முதலான பக்ஷிகளாக அத்யவஸித்துத் தம்முடைய அபராதத்தைப் பார்த்து வாராதிருந்தானத்தனை. அவனுடைய அபராத ஸஹத்வ குணத்தை உணர்த்தவே வருவன் என்று 'என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக் கென்றொருவாய் சொல் என்பிழைக்கு மிளங்கிளியே நான்வளர்த்த நீயலையே' என்று ஸ்வாமியான தம்முடைய க்ஷமைக்குத் தக்கபடி, 'என்ன பிழை செய்தாளென்று சொல்லுங்கோ' ளென்று தூது விட்டாள். மால்யவானில் பெருமாள் பிராட்டியினுடைய விச்லேஷத்தாலே வர்ஷா காலத்தில் மிகவும் நொந்து, மஹாராஜர் குறிப்பிட்ட காலத்தில் வாராதிருந்தபடியால் சீற்றத்துடன் இளையபெருமாளைப் போகவிட, அவர் கிஷ்கிந்தா த்வாரத்தில் ஜ்யாகோஷத்தைப் பண்ண, அதைக் கேட்டு மஹாராஜர் பீதராய் இளைய பெருமாளுடைய சீற்றத்தை மாற்றுவதற்காகத் தாரையைப் போகவிட, அவள், 'கிம் கோபமூலம் மநுஜேந்த்ர புத்ர' என்று பெருமாளுடைய க்ஷமாகுணத்தை நினைத்துப் பேசினளிறே.

'பிறவித் துயரற' என்கிற திருவாய்மொழியில், 'எப்பால் எவர்க்கும் நலத்தா லுயர்ந்துயர்ந் தப்பாலவன்' என்று ஸர்வேச்வரன் எல்லா அவஸ்தையிலும் யாருக்கும் போக்யனாய் இருக்கு மிருப்பை அநுஸந்தித்தார். ஸ்ரீபீஷ்மர் 'வ்ருஷ்ணிமம் உவஹாய' என்கிறபடியே திருவாழியைக் கையிலேந்திக்கொண்டு தம்மைக் கொல்ல வருகிற தசையில் அவன் போக்யதையை அநுஸந்தித்து, 'யுத்தாய மாமமண்ணாட ஹ்ருயாகிருஷ அஸ்மிந்தம:' என்றும், 'ஏஹ்யேஹி ஃபுல்லாம்புஜ பத்ரநேத்ர' என்றும் ஈடுபட்டாரிறே. ராவணனும் 'பச்யாம: ப்ரவத்தாதவீரஸ்ய பஞ்ஜநீயஸ்ய விக்ரமை:' என்று பெருமாளிடம் ஈடுபட்டானிறே. இவரும்

'கடியன் கொடியன் நெடியமால் உலகங்கொண்ட
வடியன் அறிவருமேனி மாயத்தன் ஆகிலும்
கொடிய வென்னெஞ்சம் அவனென்றே கிடக்குமெல்லே'

என்று அவனிடத்தில் தோஷாநுஸந்தானத்தைப் பண்ணியிருக்கச் செய்தேயும் அவனுடைய போக்யதையிலே ஈடுபட்டு 'அவனென்றே கிடக்கு' மென்றார்.

'மண்ணையிருந்து துழாவி'யில், கீழ், 'கோவை வாயா'ளில் 'பூசுஞ் சாந்தென்னெஞ்சம்' என்கிறபடியே தம்முடைய கரணங்களைப் போக்யங்களாகக் கொண்ட ப்ரணயித்வ குணத்தை அநுஸந்தித்துக் காதல் மையலேறிக் கிழிச்சீரையோடு யந்தத்தை யிழந்தவன் அந்த கிழிச் சீரைக்கு ஸத்ருசங்களான கிழிச்சீரைகளை அவிழ்த்தவிழ்த்துப் பார்க்குமாப்போலே ஸத்ருச பதார்த்தங்களையும் ஸம்பந்தி பதார்த்தங்களையும் பார்த்துப் பிச்சேறினர்.

. 'கடல் ஞால'த்தில், ப்ரஹ்மாத்மகத்வாநுஸந்தாந ப்ரகர்ஷத்தாலே வாமதேவர் 'அஹம் மநுரபவம் ஸூர்யஶ்ச' என்றாப்போலும், ப்ரஹ்லாதர், 'ஸ ஏவாஹமவஸ்தித:' என்று பேசினாப்போலவும், ஆழ்வாரும் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி சேஷ்டிதங்களைத் தாமே செய்ததாகப் பேசினதை அர்யாபதேசத்தில் விச்லேஷ வ்யஸநத்தாலே தாமான தன்மை மாறி நாயிகாவஸ்தையைப் பஜித்துக் கோபிமார் க்ருஷ்ண விச்லேஷத்தில் 'துஷ்டகாளிய திஷ்டாத்ர க்ருஷ்ணோஹமிதி சாபரா' என்று அநுகரித்துத் தரித்தாப்போலே இவளும் அநுகரித்துத் தரிக்கிறாளென்று தாயார் பேசும் பேச்சாலே பேசினர்.

'உருகுமால்' என்கிற திருவாய்மொழியில், இவருக்குப் பிறந்த விச்லேஷ வ்யஸநத்தை மாற்றுவதற்காக ஈச்வரன் சேஷியான முறை மாறிச் சேஷபூதனாய் நின்று பரிமாறின பரிமாற்றத்தை ஸ்மரிப்பிக்க, அத்தாலே தளர்ந்து 'ஆருயிர் பட்டது எனதுயிர்பட்ட'தென்று 'இங்கு எனதுயிர் பட்ட பாட்டை அங்கு நித்யஸூரிகள் தான் பட்டார்களோ?' என்று நவோடையானவள் பர்த்தாவோடுண்டான ப்ரதம ஸம்ச்லேஷத்தில் பர்த்தா தலைகீழாகப் பரிமாறின பரிமாற்றத்தைக் கண்டு வேர்ப்பதுவிடுவதாகிற அநுபவம் தமக்கு உண்டானதைப் பேசினர்.

'மல்லிகை கமழ்' என்கிற திருவாய்மொழியில் பத்தாவஸ்தைக்கும் முக்தாவஸ்தைக்கும் ஸந்தியான முமுக்ஷுத்வாவஸ்தையில் பலப்ராப்தி விளம்பிக்க தமக்குண்டான வ்யஸநத்தை ஸாயம் ஸந்த்யையில் க்ருஷ்ணன் பசு மேய்த்து வருகிற காலத்தில் அவன் பிற்குழையில் வர முற்குழையில் காணப் பெறாமையாலே தளர்ந்த கோபிமார் மல்லிகை தென்றல் முதலான பாதக பதார்த்தங்களுக்கு நோவுபட்டுப் பேசின பாசுரத்தாலே பேசினர்.

'வேய்மரு தோளிணை'யில் ஸர்வேச்வரன் பரமபத ப்ராப்தியைச் சடக்கெனச் செய்யாமல் லீலாவிபூதியில் வைத்திருப்பதை 'அநுஸந்தித்து 'இப்படியே லீலாவிபூதியிலேயே வைக்குமோ?' வெனச் சங்கித்து நோவுபட, ஈச்வரன் தெளியவைத்த ப்ரகாரத்தைத் திருவாய்ப்பாடியில் காலையில் கோபிகளோடு ஸம்ச்லிஷ்டனான க்ருஷ்ணனைப் பார்த்து, 'நீ பசு மேய்க்குங்காலம் வந்தபடியால் நீ பசு மேய்க்கப் போகை தவிராய்; போவுதியாகில் நாங்கள்

ஆற்றமாட்டோம். ஆனதுபற்றி நீ மேய்க்கப்போகை தவிரவேணும்' என்று நிர்ப்பந்திக்க, அவன் தவிர்ந்தமையைப் பேசின பாசுரத்தாலே பேசினர்.

இவர் ப்ரக்ருதியைச் சொல்கிற 'துவளில் மாமணி' என்கிற திருவாய் மொழியில், இரங்கி;நாடொறும் வாய்வெரீஇ—'கண்ணநீர் மல்க' 'மரங்களு மிரங்கும் வகை மணிவண்ணவோ என்று கூவும்', 'பின்னைகொல் நிலமாமகள் கொல் திருமகள் கொல் பிறந்திட்டாள் என்ன மாயங்கொலோ?' என்று இவர் அநுபவம் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படியே அநேகாநுபவங்கள் அந்தந்தத் திருவாய்மொழிகளில் ஏற்பட்டிருக்கும். அவைகள் விஸ்தர பயத்தாலே நிரூபிக்கப்படவில்லை. ஈச்வரன் ஆழ்வாருக்கு மயர்வற மதிநல மருள, அந்தப் பக்திரூபாபந்ந ஜ்ஞாநமானது ஸம்ச்லேஷ விச்லேஷங்களாலே அபிவ்ருத்தமாய் முந்திக் கடல் போலப் பெருகிற்று. பிந்தி 'மண்திணி ஞாலமும் ஏழ்கடலும் நீள் விசும்பும் கழிபப் பெரிதால்' என்கிறபடியே லீலா விபூதி முழுவதையும் விளாக்கொலை கொண்டது. பின்பு, 'முனியே நான்முக'னில், 'சூழ்ந்தகன் றாழ்ந்துயர்ந்த' என்கிற பாசுரத்தின் படி தத்வ த்ரயத்தையும் விளாக்கொலை கொண்டு பரம பக்தி தசாபந்நமாய்ப் பேரவாவாக ஏற்பட்டது. ஸர்வேச்வரனும் இவருடைய பேரவாவிலும் பெரிய அவாவை யுடையவனாய் 'அவாவற்று வீடுபெற்ற' என்கிறபடியே இவர்க்குப் பரமபத ப்ராப்தியைப் பண்ணிக் கொடுத்தான்.

---

ஸ்ரீ:

# காயத்ரியின் மஹிமையும் ப்ராஹ்மண்யமும்.

(ஸ்ரீ. உபய. வித்வான் தட்டை ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி.)

ப்ரஹ்ம ஸ்ருஷ்டியில் அடங்கியிருக்கிற எல்லா ப்ராணிகளுக்கும் அவர்ஜநீயமான ப்ரக்ருதி ஸம்பந்தத்தினால் அஜ்ஞாநமே பேலிட்டிருக்கிறது. அவரவர்கள் முற்பிறப்பில் செய்திருக்கிற கர்மாக்களுக்குத் தக்கபடி ஸுக துக்கங்களும், ஜ்ஞாந அஜ்ஞாநங்களும், நல்லறிவும், அவிவேகமும், செல்வமும், வறுமையும், ஆரோக்யமும், பிணியும் எங்கும் உலகில் நிலைபெற்றிருப்பதை நாம் கண்ணுற்று வருகிறோம். பரம புருஷனுடைய லீலாவிபூதியிலுள்ள எல்லா ஜந்துக்களுக்கும் தத்தம் வினைகளே ஸம்ஸாரத்

திற்குக் காரணமாக இருக்கின்றன. அந்தக் கர்மாக்கள் ஸஞ்சிதம் ஆகாமி ப்ராரப்தம் என மூன்று வகைப்பட்டிருக்கின்றன. ஸஞ்சிதமாவது, பலோந் முகமாக இராமல் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிற கர்மவிசேஷம். ஆகாமியாவது, வருங் காலத்தில் நம்முடைய செய்கையினுல் ஸம்பவிக்கக் கூடியது. ப்ராரப்தமாவது, தத்காலத்தில் சரீரத்தைக் கொடுத்து ஸுகதுக்கங்களை அநுபவிக்கச் செய்வித்துக்கொண்டு பலனைக் கொடுத்துக்கொண்டே இருக்கிற கர்ம விசேஷம். இந்தக் கர்மாக்கள் புண்யம் பாபம் என இருவகைப்பட்டிருக்கின்றன. ஜீவ வர்க்கங்களுக்கும் கர்மாக்களுக்கு முள்ள ஸம்பந்தம் தொன்று தொட்டுள்ளது. ஒரு காலத்தில் கர்ம ஸம்பந்தமில்லாத ஜீவராசிகள் கர்மாக்களோடு சேர்க்கை பெற்றனவென்று சொல்ல முடியாது. இவைகள் இரண்டும் பீஜாங்குர ந்யாயத்தை அநுஸரித்து ஒன்றுக்கொன்று காரணமாக இருந்துகொண்டு வருகின்றன. வித்திலிருந்துதான் அங்குரம் கிளம்பிப் பயிர் உண்டாகிறது; பயிரால்தான் வித்து உண்டாகிறது. அவ்வண்ணமே கர்மாவினுல்தான் ஜீவன் ஸம்ஸரிக்கிறுன்; ஜீவன் ஸம்ஸரிப்பதால்தான் கர்மா விளைகிறது. இந்தக் கர்மாவை ஒப்புக்கொண்டாலொழிய ஈச்வரனுக்கு ஏற்படக்கூடிய வைஷம்ய நைர்க்ருண்யங்கள் பரிஹரிக்க முடியாதவைகளென்று வேதாந்தர்க்கதங்களான மதங்களைச் சார்ந்தவர்கள் எல்லோரும் விப்ரதிபத்தி யின்றிப் பகர்கின்றனர். ஜந்மாந்தரங்களையும் கர்மாக்களையும் ஒப்புக்கொள்ளாத புறச் சமயத்தவர்கள், ராகத்வேஷம் முதலிய ஹேய குணங்களில்லாமல் தயாநிதியாகவும் தூய குணங்கள் நிறைந்தவனுகவு மிருக்கிற பரம புருஷன் ஏன் இம்மண்ணுலகில் ஸுகம், துக்கம், ஆரோக்யம், பிணி, செல்வம், வறுமை, ஜ்ஞாநம், என்னும் இப்படிப்பட்ட விருத்த குணதிகளை ஒரே ஸமயத்தில் அநுபவிக்கிற ஜந்துக்களைப் படைத்தானென்று கேட்டால், அதற்கு அவர்கள் ஒருவித யுக்தியும் சொல்ல முடியாமல் தத்தளிக்கின்றனர். கருணாநிதியான அந்தப் பரம புருஷன் எல்லா ப்ராணிகளையும் பரம ஸுகிகளாக வன்றோ படைக்க வேண்டும்? வைஷம்ய நைர்க்ருண்ய குணங்களில்லாத ஜகதீச்வரன் எல்லோரையும் பேதமின்றி உயர்ந்த ஒரே நிலைமையிலன்றோ வைத்திருக்க வேண்டும்? கர்மாக்களை ஒப்புக்கொள்ளுகிற ஸத்ஸித்தாந்திகளோ வென்றால், 'அவனவன் செய்த வினைக்குத் தக்கபடி ஈச்வரன் பல ப்ரதாநம் செய்கிறுன். எல்லா விஷயங்களிலும் ஈச்வரன் ஸாமாந்ய காரணமாக இருக்கிறுன். ஜீவனுடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஜீவனுக்கே ஸ்வாதந்த்ர்யம். ஸர்வேச்வரன் கொடுத்த அறிவையும் கர்த்ருத்வத்தையும் காரண களேபரங்களையுங்கொண்டு ஜீவன் ப்ரதம க்ஷணத்தில் தானே ப்ரவர்த்திக்கிறுன். ப்ரவர்த்தித்த பிறகு இரண்டாவது க்ஷணம் தொடங்கி அவன் அநுமதி செய்பவனுக இருக்கிறுன்' என்

ஆற்றமாட்டோம். ஆனதுபற்றி நீ மேய்க்கப்போகை தவிரவேணும்' என்று நிர்ப்பந்திக்க, அவன் தவிர்ந்தமையைப் பேசின பாசுரத்தாலே பேசினர்.

இவர் ப்ரக்ருதியைச் சொல்கிற 'துவளில் மாமணி' என்கிற திருவாய்மொழியில், இரங்கி;நாடொறும் வாய்வெரீஇ—'கண்ணநீர் மல்க' 'மரங்களுமிரங்கும் வகை மணிவண்ணவோ என்று கூவும்', 'பின்னைகொல் நிலமாமகள்கொல் திருமகள் கொல் பிறந்திட்டாள் என்ன மாயங்கொலோ?' என்று இவர் அநுபவம் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படியே அநேகாநுபவங்கள் அந்தந்தத் திருவாய்மொழிகளில் ஏற்பட்டிருக்கும். அவைகள் விஸ்தர பயத்தாலே நிரூபிக்கப்படவில்லை. ஈச்வரன் ஆழ்வாருக்கு மயர்வற மதிநல மருள, அந்தப் பக்திரூபாபந்ந ஜ்ஞாநமானது ஸம்ச்லேஷ விச்லேஷங்களாலே அபிவ்ருத்தமாய் முந்திக் கடல் போலப் பெருகிற்று. பிந்தி 'மண்திணி ஞாலமும் ஏழ்கடலும் நீள் விசும்பும் கழிபப் பெரிதால் 'என்கிறபடியே லீலாவிபூதி முழுவதையும் விளாக்கொலை கொண்டது. பின்பு, 'முனியே நான்முக'னில், 'சூழ்ந்தகன் றாழ்ந்துயர்ந்த' என்கிற பாசுரத்தின்படி தத்வ த்ரயத்தையும் விளாக்கொலை கொண்டு பரம பக்தி தசாபந்நமாய்ப் பேரவாவாக ஏற்பட்டது. ஸர்வேச்வரனும் இவருடைய பேரவாவிலும் பெரிய அவாவை யுடையவனாய் 'அவாவற்று வீடுபெற்ற' என்கிறபடியே இவர்க்குப் பரமபத ப்ராப்தியைப் பண்ணிக் கொடுத்தான்.

---

ஸ்ரீ:

# காயத்ரியின் மஹிமையும் ப்ராஹ்மண்யமும்.

(ஸ்ரீ. உபய. வித்வான் தட்டை ஸ்ரீ சிவாஸாசார்ய ஸ்வாமி.)

---

ப்ரஹ்ம ஸ்ருஷ்டியில் அடங்கியிருக்கிற எல்லா ப்ராணிகளுக்கும் அவர்ஜநீயமான ப்ராக்ருதி ஸம்பந்தத்தினல் அஜ்ஞாநமே மேலிட்டிருக்கிறது. அவரவர்கள் முற்பிறப்பில் செய்திருக்கிற கர்மாக்களுக்குத் தக்கபடி ஸுக துக்கங்களும், ஜ்ஞாந அஜ்ஞாநங்களும், நல்லறிவும், அவிவேகமும், செல்வமும், வறுமையும், ஆரோக்யமும், பிணியும் எங்கும் உலகில் நிலைபெற்றிருப்பதை நாம் கண்ணுற்று வருகிறோம். பரம புருஷனுடைய லீலாவிபூதியிலுள்ள எல்லா ஜந்துக்களுக்கும் தத்தம் வினைகளே ஸம்ஸாரத்

திற்குக் காரணமாக இருக்கின்றன. அந்தக் கர்மாக்கள் ஸஞ்சிதம் ஆகாமி ப்ராரப்தம் என மூன்று வகைப்பட்டிருக்கின்றன. ஸஞ்சிதமாவது, பலோந்முகமாக இராமல் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிற கர்மவிசேஷம். ஆகாமியாவது, வருங் காலத்தில் நம்முடைய செய்கையினால் ஸம்பவிக்கக் கூடியது. ப்ராரப்தமாவது, தத்காலத்தில் சரீரத்தைக் கொடுத்து ஸுகதுக்கங்களை அநுபவிக்கச் செய்வித்துக்கொண்டு பலனைக் கொடுத்துக்கொண்டே இருக்கிற கர்ம விசேஷம். இந்தக் கர்மாக்கள் புண்யம் பாபம் என இருவகைப்பட்டிருக்கின்றன. ஜீவ வர்க்கங்களுக்கும் கர்மாக்களுக்கு முள்ள ஸம்பந்தம் தொன்று தொட்டுள்ளது. ஒரு காலத்தில் கர்ம ஸம்பந்தமில்லாத ஜீவராசிகள் கர்மாக்களோடு சேர்க்கை பெற்றனவென்று சொல்ல முடியாது. இவைகள் இரண்டும் பீஜாங்குர ந்யாயத்தை அநுஸரித்து ஒன்றுக்கொன்று காரணமாக இருந்துகொண்டு வருகின்றன. வித்திலிருந்துதான் அங்குரம் கிளம்பிப் பயிர் உண்டாகிறது; பயிரால்தான் வித்து உண்டாகிறது. அவ்வண்ணமே கர்மாவினால்தான் ஜீவன் ஸம்ஸரிக்கிறான்; ஜீவன் ஸம்ஸரிப்பதால்தான் கர்மா விளைகிறது. இந்தக் கர்மாவை ஒப்புக்கொண்டாலொழிய ஈச்வரனுக்கு ஏற்படக்கூடிய வைஷம்ய நைர்க்ருண்யங்கள் பரிஹரிக்க முடியாதவைகளென்று வேதாந்தர்க்கதங்களான மதங்களைச் சார்ந்தவர்கள் எல்லோரும் விப்ரதிபத்தியின்றிப் பகர்கின்றனர். ஜந்மாந்தரங்களையும் கர்மாக்களையும் ஒப்புக்கொள்ளாத புறச் சமயத்தவர்கள், ராகத்வேஷம் முதலிய ஹேய குணங்களில்லாமல் தயாநிதியாகவும் தூய குணங்கள் நிறைந்தவனாகவு மிருக்கிற பரம புருஷன் என் இம்மண்ணுலகில் ஸுகம், துக்கம், ஆரோக்யம், பிணி, செல்வம், வறுமை, ஜ்ஞாநம், என்னும் இப்படிப்பட்ட விருத்த குணதிகளை ஒரே ஸமயத்தில் அநுபவிக்கிற ஜந்துக்களைப் படைத்தானென்று கேட்டால், அதற்கு அவர்கள் ஒருவித யுக்தியும் சொல்ல முடியாமல் தத்தளிக்கின்றனர். கருணாநிதியான அந்தப் பரம புருஷன் எல்லா ப்ராணிகளையும் பரம ஸுகிகளாக வன்றோ படைக்க வேண்டும்? வைஷம்ய நைர்க்ருண்ய குணங்களில்லாத ஜகதீச்வரன் எல்லோரையும் பேதமின்றி உயர்ந்த ஒரே நிலைமையிலன்றோ வைத்திருக்க வேண்டும்? கர்மாக்களை ஒப்புக்கொள்ளுகிற ஸத்ஸித்தாந்திகளோ வென்றால், 'அவனவன் செய்த வினைக்குத் தக்கபடி ஈச்வரன் பல ப்ரதாநம் செய்கிறான். எல்லா விஷயங்களிலும் ஈச்வரன் ஸாமாந்ய காரணமாக இருக்கிறான். ஜீவனுடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஜீவனுக்கே ஸ்வாதந்த்ர்யம். ஸர்வேச்வரன் கொடுத்த அறிவையும் கர்த்ருத்வத்தையும் கரண களேபரங்களையுங்கொண்டு ஜீவன் ப்ரதம க்ஷணத்தில் தானே ப்ரவர்த்திக்கிறான். ப்ரவர்த்தித்த பிறகு இரண்டாவது க்ஷணம் தொடங்கி அவன் அநுமதி செய்பவனாக இருக்கிறான்' என்

கின்றனர். இந்த அர்த்தத்தை ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன், ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தில்,

"ச்ருதிஸ்ஸ்வயம் த்யாயதி யஸ்ய பாவம் கதம் ஸ கல்பித:
ஸாக்ஷீ ஸ்வயம் ஸர்வதர்சனோ வ்ருஜினே ப்ரவிஷ்டோ வ்ருத்தி: கதம் ।
ஸ்வாதீன ஸர்வ ஜகதஸ்ஸ்வரஸ்ய ச கதம் பாரவச்யம் ப்ரார்த்தித:
ப்ராஹ்மண்யந காபி ந ப்ரவிசதி: கர்மஸு பாவனாஸு பாவனாஸு॥"

என்கிற இந்த ச்லோகத்தினுல் அநுக்ரஹித்தார். கர்மாநுகுணமாக பல ப்ரதாநம் செய்துகொண்டு ஸர்வாந்தர்யாமியாகவும் ஸர்வ ஸாக்ஷியாகவும் ஸர்வ சர்ம ஸமாராத்யனுகவு மிருக்கிற அந்தப் பரம புருஷன் மந்த்ராதீனனுக இருக்கிருன். "தைவாதீனம் ஜகத் ஸர்வம் மந்த்ராதீனம் து தைவதம் । தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீனம் ப்ராஹ்மணா மம தைவதா: ।" என்கிற பகவத் வசநமே இந்த விஷயத்தில் ப்ரமாணம். நிஸ்ஸமாப்யதிகனுன அந்தப் பரம புருஷன், மந்த்ரத்துக்கு உடன் பட்டிருப்பானே யாகில், மந்த்ரத்தின் மஹிமை எவர்களால் வர்ணிக்க முடியும்? அப்படிப்பட்ட மந்த்ரம் ப்ராஹ்மணுதீநமாக இருக்குமேயானுல் ப்ராஹ்மணர்களின் மஹிமை வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாததன்றோ? இதைக் கணிசித்தே பரம புருஷன், 'ப்ராஹ்மணர்கள் எனக்கு ஆராத்ய தேவதைகள்' என்று தானே புகழ்ந்திருக்கிருன்.

மநநம் செய்பவர்களை ரக்ஷிக்கிற சக்தியுள்ளதாக இருப்பதால் அதற்கு மந்த்ரமென்று பெயர். அவ்வித மந்த்ரங்களுக்குள் காயத்ரீ என்கிற மந்த்ரம் ஒன்றே சிறப்புற்றது. "காயந்தம் த்ராயதே" என்கிற வ்யுத்பத்தியினுல் ஸ்வர வர்ணுதி தோஷங்களில்லாமல் உள்ளபடி உச்சாரணம் செய்கிறவர்களை ரக்ஷிக்கிற தென்கிற பொருள் உள்ளது காயத்ரீ சப்தம். இந்த மந்த்ரமானது ஒவ்வொரு பாதத்திற்கும் எவ்வெட்டக்ஷரங்க ளுள்ள அநுஷ்டுப் சந்தஸ்ஸைச் சார்ந்தது. இந்தக் காயத்ரீ மஹா மந்த்ரத்தில் அநுஷ்டுப் சந்தஸ்ஸைச் சார்ந்த மூன்று பாதங்களே இருக்கின்றன. துரீய பாதமானது ஸாமாந்யமாக எல்லோருக்கும் உபதேச யோக்யமன்று; சில நல்ல வ்யக்திகளுக்கே ஸமயவிசேஷத்தில் ஸதாசார்யர்களால் உபதேசிக்கத் தக்கது. இம் மந்த்ரத்தில் அடங்கி யிருக்கிற (ண்ய) என்கிற ஸம்யுக்தாக்ஷரங்களைச் சேர்த்தும் தனித்துப் பிரித்தும் உச்சரிப்பதினுல் முறையே காயத்ரீமந்த்ரம் 23 அல்லது 24 அக்ஷரங்கள் அடங்கியதென்று ஆசார்யர்கள் பகர்கின்றனர். இம் மந்த்ரத்திலுள்ள மூன்று பாதங்களும் முறையே ருக் யஜுஸ் ஸாம வேதங்களின் ஸாரங்கள். இந்த விஷயத்தில், "த்ரிப்ய ஏவ து வேதேப்ய: பாதம் பாதம் அதூதுஹத் । ததித்ருசோ அஸ்யா: ஸாவித்ர்யா: பர

ஒஷ்ஷ் வு ஜாவதிः" என்கிற மநுவசநம் ப்ரமாணம். இப்படியே ஆபஸ்தம்ப தர்மத்தில் "ஸவெஉஹெ்யா வெவ வெஜெஹ் ஸாவித்ர்யநுஒஅ்யத ஊதி ஹி ஸ்ராஹ்மணா॥" என்று ஸூத்ரம். ப்ரஹ்ம க்ஷத்ரிய வைச்யர்கள் மாத்ரு குக்ஷியினின்று ஆவிர்ப்பவிக்கும் தருணத்தில் அஸம்ஸ்க்ருதமான ஒரு ஜந்மாவையும், உபநயந காலத்தில் ஸர்வ வேதஸாரமான காயத்ரீ மந்த்ரோபதேசத்தைப் பெற்றுச் சிறந்த மற்றொரு ஜந்மாவையும் பெறுவதால் த்விஜர்களென்று சொல்லப்படுகிறார்கள். இவற்றுள் முதலாவது பிறப்பு சிறப்பு வாய்ந்ததல்ல. அந்த ஜந்மாவானது, சாணைக் கல்லில் கொடுத்துக் கடைவதற்கு முன் ஒளிமங்கிய ஸாமாந்யமான கல் போலிருக்கும் ரத்நம் போன்றது. இரண்டாவதான ப்ரஹ்ம ஜந்மாவோ வென்றால் ஸர்வோத்தமமானது. இது காயத்ரீ என்கிற மாதாவினாலும், ஆசார்யன் என்கிற பிதாவினாலும் உண்டு பண்ணப்படுகிறது. ஸாமாந்யமான முந்தின ஜந்மாவைவிட, பிந்தினதான இந்த ஜந்மாவே உயர்ந்ததென்று மஹர்ஷிகளும் ஆசாரியர்களும் புகழ்ந்திருக்கின்றனர். இவ்விஷயம் ஆபஸ்தம்ப தர்மத்தில், "தமெஹெ ந ஊ ஹெ்யஙீ க்ஷாஅந,ஸஹி விஃ்யாதஸ்தம் ஜநயதி, தஹெஷ்ம் ஜநு, ஶரீரமெவ ஊதாவித ரஜநயதः" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸர்வவேத ஸாரமாக இருப்பதுபற்றி இதை, வேதபர்யாயமான ப்ரஹ்ம சப்தத்தால் வ்யவஹரிக்கிறார்கள். அக்காரணத்தினாலேயே உபநயந காலத்தில் முக்யதமமான இந்தக் காயத்ரீ மந்த்ரோபதேசத்தை ப்ரஹ்மோபதேச மென்று வழங்குகிறார்கள். இதை ஒருதடவை நியமத்தோடு ஜபித்தால் மூன்று வேதங்களையும் ஒருதடவை பாராயணம் செய்த பலன் உண்டாகிறது. இந்த மந்த்ரத்ரஷ்டா விச்வாமித்ர மஹர்ஷியாதலால் அந்த கோத்ரத்தில் அவதரித்த ஸ்ரீ நிகமாந்த தேசிகன் வேத மாதாவான ஸ்ரீ காயாத்ரீ தேவியோடு தமக்குக் கிடைத்த ஸர்வோத்தமமான ஸஹோதர பாவத்தை, "ஸுநெ்ய ஙூகம் ஹவந ஊந்யஊ நிஙூகம் வாகத ஊம் க்ஷெ கவிஙஹஒஉய ஊஙவாயெ। ஜநுவிதீய ஊஷிஹிः கயிதம் யதஸ்வா ஜெவீஅ விஶ்வஜநநீ யஊநந்யமொத்ரா॥" என்று ஆநந்த பாரவச்யத்தால் வாய்விட்டு உத்கோஷித்திருக்கிறார் ஸ்ரீஸங்கல்பஸூர்யோதய நாடகத்தில். இந்த மஹாமந்த்ரமே எல்லோருக்கும் எல்லா அபீஷ்டங்களையும் கொடுப்பதில் ஸமர்த்தமானது. யஞ்ஞம் தாநம் தபஸ் இவை முதலிய தர்மாசரணங்களால் அடையத்தக்க ஸித்தியை, இந்த காயத்ரீ மந்த்ரஜபம் ஒன்றினாலேயே ப்ராஹ்மணன் அடையத் திறமை வாய்ந்தவனாக ஆகிறான். இந்த விஷயத்தை "ஜவெ்ய நைவது ஸம்ஸிஜெ்ய ஸ்ராஹ்மணொ நாத்ரஸம்ஶயः। கூஙாுஉந்யஙவாக ஙாு நெநெ்ரா ஸ்ராஹ்மண உஅ்யதே" என்கிற ச்லோகத்தால் ஸ்வாயம்புவ மநு துலக்கமாகப் பகர்ந்திருக்கிறார். மந்த்ர சாஸ்த்

ரங்களிலும் வேதவேதாந்தங்களிலும் எவ்வளவோ மந்த்ரங்கள் இருக்க, அவைகள் அனைத்தையும் பிற்படுத்தி, இந்த காயத்ரீ மந்த்ரத்தை மாத்ரம் எல்லா இடங்களிலும் எல்லா மஹர்ஷிகளும் எல்லா ஆசார்யர்களும் ஆதரித்த தற்குக் காரணம் இம்மந்த்ரத்தின் அஸாதாரணமான சக்தியினாலேயே. இது ஸர்வோத்தமமான ஸாத்விக மந்த்ரம். இதில் ப்ரதிபாத்ய தேவதை ஜகத் ப்ரஸ விதாவான ஸ்ரிய:பதி. காம்ய பலத்தைக் கருதாமல் பகவத் முகோல்லாஸார்த்த மாக இந்த மந்த்ர ஜபத்தைச் செய்பவனுக்கு அபவர்க்க பர்யந்தமான ஸர்வா பீஷ்டங்களும் ஸித்திக்கின்றன. இந்த மந்த்ரஜபம், உச்சம், உபாம்சு, மாநஸம் என்று மூன்று விதம். உரத்துச் சொல்வது உச்சமென்றும், அக்ஷரங்களை உதடு அசையும்படி உச்சரித்து மந்த்ராநுஸந்தாநம் செய்வது உபாம்சு என் றும், மநஸ்ஸினாலேயே த்யாநிப்பது மாநஸம் என்றும் சொல்லப்படுகின்றன. இம்மூன்றினுள் மாநஸ ஜபமே சிறந்தது. உச்சத்தைக் காட்டிலும் உபாம்சு பத்து மடங்கு அதிகமான பலத்தைக் கொடுக்கிறது. மாநஸமோ உபாம்சு வைவிட நூறு மடங்கு அதிகமாக பலனை விளைவிக்கிறது. இதை க்ருஹத் தில் ஜபித்தால் எவ்வளவு தடவை ஜபித்தோமோ அவ்வளவுதான் பலன். நதீ முதலிய பரிசுத்த ஸ்தலங்களில் ஜபித்தால் ஒன்று இரண்டு மடங்காகவும், பசுக்கள் கட்டப்பட்டிருக்கும் இடத்தில் ஜபித்தால் ஒன்று பத்து மடங்காக வும், அக்நி க்ருஹத்தில் ஜபித்தால் ஒன்று நூறு மடங்காகவும், வித்தக்ஷேத்ரங்களிலும் தீர்த்தங்களிலும் தேவதா ஸந்நிதிகளிலும் ஜபித் தால் ஒன்று ஆயிரம் லக்ஷம் கோடி மடங்காகவும் இதன் பலம் வ்ருத்தி யடைகிறது. இதை ப்ரணவ வ்யாஹ்ருதிகளை முன்னிட்டு ஐந்து இடங்க ளில் நிறுத்தி உச்சரித்து ஜபிக்கவேண்டும். இது நான்கு ஆச்ரமிகளுக்கும் அவச்யம் ஜபிக்கத் தக்க மந்த்ரமாக விதிக்கப்பட்டிருக்கிறது. இதை ஆயிரத் தெட்டு தடவை ஜபிப்பது உத்தம பக்ஷம்; நூற்றெட்டுத் தடவை ஜபிப்பது மத்யம பக்ஷம்; இருபத்தெட்டுத் தடவை ஜபிப்பது அதம பக்ஷம். ப்ராத: காலத் திலும் மத்யாஹ்நத்திலும் நின்றுகொண்டும், ஸாயங்காலத்தில் உட்கார்ந்து கொண்டும் இதை ஜபிக்கவேண்டும். ஸந்த்யா காலங்களில் இந்த காயத்ரீ மந்த் ரத்தை உச்சரித்து, ஸூர்யனை உத்தேசித்து ப்ராஹ்மணர்களால் விடப்படும் அர்க்ய தீர்த்தமானது வஜ்ராயுதமாகப் பரிணமித்து, ஸூர்ய கதியை முன் னிலையில் தோன்றி தடுக்கிற மந்தேஹாள் என்கிற ராக்ஷஸர்களை முறியடித்து, அவர்களை அருணத்வீபத்தில் தூக்கித் தள்ளிவிடுகிறது. வேதாத்மாவான ஸூர்யனுக்கு முன்னிலையில் வாலகில்ய ரிஷிகளால் பாராய ணம் செய்யப்படும் உபநிஷத்தாகிற தநுஸ்ஸில் இந்த காயத்ரீ, மந்த்ரத்தால் அபிமந்த்ரணம் செய்யப்பட்டு ப்ராஹ்மணர்களால் விடப்படும் அர்க்ய தீர்த் தம் வஜ்ரநாராசமாக ஆகிறதென்று ச்ருதி வசநங்கள் சொல்லுகின்றன. இதை

ப்ரஹ்மசாரிகளும் க்ருஹஸ்தர்களும் ப்ரணவத்தை முன்னிட்டு ஜபம் செய்ய வேண்டும். வாநப்ரஸ்தர்களும் ஸந்யாஸிகளும் ஆறு ப்ரணவங்களைச் சேர்த்து ஸம்புட காயத்ரியாக இதை அநுஸந்திக்க வேண்டும். இந்த காயத்ரீ தேவதையை ப்ராத: காலத்தில் ஸூர்யமண்டல மத்யத்திலிருப்பவளாகவும், ருக்வேதத்தை உச்சரிப்பவளாகவும், சிவந்த நிறமுள்ளவளாகவும், பத்மாக்ஷ மாலையைக் கையில் தரித்துக்கொண்டு குமாரிகா ஸ்வரூபிணியாக இருப்பவளாகவும், ஹம்ஸவாஹநாரூடையாகவும், ப்ரஹ்மாவை தேவதையாக உடையவளாகவும் த்யாநிக்கவேண்டும். மத்யாஹ்ந காலத்தில் காயத்ரீ தேவதையை ரவிமண்டல மத்யத்திலிருப்பவளாகவும், யஜுர்வேதத்தைப் பாராயணம் செய்து கொண்டிருப்பவளாகவும், வெண்ணிறத்துடன் சூலத்தைக் கையில் ஏந்தி யுவதி வேஷம் பூண்டு ருத்ரனைத்தேவதையாகக் கொண்டு வ்ருஷபவாஹநத்தில் வீற்றிருப்பவளாகவும் த்யாநிக்கவேண்டும். ஸாயங்காலத்தில் ஸரஸ்வதீ ரூபிணியாகவும், ரவிமண்டல மத்யஸ்தையாகவும், கறுத்த நிறமுள்ளவளாகவும், ஸாமவேதத்தை உச்சரித்துக் கொண்டிருப்பவளாகவும், சக்ராயுதத்தைத் தரித்திருப்பவளாகவும் த்யாநம் செய்து கொண்டு கருடவாஹநத்தில் இருப்பவளாகவும் மங்கள கரியாகவும் வ்ருத்தையாகவும், விஷ்ணுவைத் தேவதையாகக் கொண்டவளாகவும், த்யாநிக்கவேண்டும். இந்த காயத்ரீயைச் சார்ந்த ஒவ்வொரு அக்ஷரத்தையும் ஒவ்வொரு ஆயிரத்துக்கும் முதல் அக்ஷரமாக வைத்து வால்மீகி மஹர்ஷி இருபத்து நாலாயிரம் ச்லோகங்களால் ஸ்ரீமத் ராமாயண மென்கிற சரணாகதி சாஸ்த்ரத்தைச் செய்து, ப்ரஹ்ம தேவன் நியமநத்தைத் தலைக் கட்டினார். அநேக ராமாயணங்களிருக்க, இந்த வால்மீகி ராமாயணத்துக்கு வந்த பெருமைக்குக் காரணம் யாதெனில், இந்த காயத்ரீ ஸம்பந்தமே. ஸர்வோத்தமமான ஸாத்விக தேவதையை த்யாநிக்கத்தக்க வஸ்துவாக ப்ரதிபாதிப்பதால் இந்த காயத்ரீமந்த்ரம் அவாங்மநஸ கோசரமான வைபவமுள்ளதாக உலகத்தில் ப்ரகாசிக்கிறது. இந்த மந்த்ரத்தினால் ப்ராஹ்மத்தை த்யாநிப்பவர்களுக்கு ஸ்ரீ பரமபதம் ஹஸ்தகதமாக இருக்கிறது. "ஸகாஷிந ஷூஷா ஸூஹய்யா யிநொ யொமிநொ ஹி யெ। தெஷாம் தகூ வஶம் ஷூாநம் யலெவ வஶ்யஹி ஸூமஶ:॥" என்கிற திவ்ய ஸூக்தி இந்த விஷயத்தில் ப்ரமாணம். ச்ரத்தையுடனும் பக்தியுடனும் இந்த காயத்ரீ மந்த்ரத்தினால் பரமபுருஷனை த்யாநிப்பவர்கள் ஸாத்விகர்களேயாவர். "நாராயணெகநிஷ்ணா யெ ஸாத்விகாம் ஷூாஷிவொயத" என்கிற வசநம் இதில் அஸாதாரணமான ப்ரமாணம்.

இந்த காயத்ரியை ப்ராஹ்மணர்களுக்கும் க்ஷத்ரிய வைச்யர்களுக்கும் உபதேசிக்கிற அதிகாரம் ப்ராஹ்மணர்களுக்கே அஸாதாரணம். ப்ராஹ்மண

னுக்குக் கர்ப்பாஷ்டம வர்ஷத்திலாவது ஜந்மாஷ்டம வர்ஷத்திலாவது உபநயந ஸம்ஸ்காரம் விதிக்கப்பட்டிருக்கிறது; க்ஷத்ரியனுக்குப் பதிேனாராவது வயதிலும், வைச்யனுக்குப் பன்னிரண்டாவது வயதிலும் விதிக்கப்பட்டிருக்கிறது. ப்ரஹ்ம வர்ச்சஸத்தில் காமனையுள்ளவனுக்கு ஐந்தாவது வர்ஷத்திலேயே உபநயநம் சாஸ்த்ர ஸம்மதம். ப்ராஹ்மணனுக்கு எட்டு வயதுக்கு மேல் பட்டு விட்டால் பதினறு வயது வரையில் உபநயநகாலம் சாஸ்த்ரக் காரர்களால் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனல் இது முக்ய காலமன்று; கௌண காலமே. கௌணகாலமான 16-வது வயது தாண்டிவிட்டால் மாணவகனைக் கொண்டு த்ரைவித்யக ப்ரஹ்மசர்யத்தை அநுஷ்டிக்கச் செய்வித்து, பிறகு அவனுக்குக் காயத்ரியை உபதேசிக்கவேண்டு மென்று ஸூத்ர காரர்கள் கூறுகின்றனர். வ்யாபகமந்த்ரங்களுக்குள் சிறந்ததான அஷ்டாக்ஷரத்தைப் போல ஸர்வவித ச்ரேயஸ்ஸுக்களுக்கும் நிதாநமான இந்த காயத்ரீ மந்த்ர ரத்நத்தை நிதிபோல் பாதுகாப்பவர்களாகிய ப்ராஹ்மணர்கள் ஐஹிகாமுஷ்மிக ச்ரேயஸ்ஸுக்களை உலகிலுள்ளோர் அனைவர்க்கும் கொடுப்பதில் காமதேநுபோல் ப்ரகாசிக்கின்றனர். இக்காரணத்தைக் கருதியே ப்ராஹ்மணர்களை ஸாக்ஷாத் மநுவே தமதுக்ரந்தத்தில் பின்வருமாறு புகழ்ந்திருக்கிறார்.

"𑌉𑌤𑍍𑌤𑌮𑌾𑌙𑍍𑌗𑍋𑌦𑍍𑌭𑌵𑌾𑌜𑍍𑌜𑍍𑌯𑍈𑌷𑍍𑌠𑍍𑌯𑌾𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌶𑍍𑌚𑍈𑌵 𑌧𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 । 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑍈𑌵𑌾𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌤𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 । 𑌤𑌂𑌹𑌿 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍𑌭𑍂𑌃 𑌸𑍍𑌵𑌾𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌪𑌸𑍍𑌤𑌪𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌤𑍋𑌽𑌸𑍃𑌜𑌤𑍍 । 𑌹𑌵𑍍𑌯𑌕𑌵𑍍𑌯𑌾𑌭𑌿𑌵𑌾𑌹𑍍𑌯𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌚 𑌗𑍁𑌪𑍍𑌤𑌯𑍇 । 𑌯𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑍇𑌨 𑌸𑌦𑌾𑌶𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌹𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑌿𑌦𑌿𑌵𑍌𑌕𑌸𑌃 । 𑌕𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌚𑍈𑌵 𑌪𑌿𑌤𑌰𑌃 𑌕𑌿𑌂𑌭𑍂𑌤𑌮𑌧𑌿𑌕𑌂 𑌤𑌤𑌃 । 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀 । 𑌸𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌮𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌯𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇 ।"

அதிகமாக எழுதினல் வ்யாஸம் விரிவாக ஆய்விடுமென்று பயந்து இத்துடன் இந்த உபந்யாஸத்தை நிறுத்திக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீ:

# மநுஸ்ம்ருதி.

(ஸ்ரீ. உப. நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர் பி. ஏ. பி. எல்)

(தொடர்ச்சி—பக்கம் 112.)

மனு முதலிய ஸ்ம்ருதி கர்த்தாக்கள் தங்கள் காலத்தில் உலகத்தில் நிலாவிவந்த தர்மாநுஷ்டானங்களை ஆராய்ந்து அவற்றை ஒழுங்காகக் கோத்து உலக நடவடிக்கைகளில் விகற்பங்களாயும் தனிப் போக்குகளாயும் காணப்பட்ட விஷயங்களை ஸநாதந தர்மத்துடன் ஒரு பிரகாரமாகச் சேர்த்தும், அவ்விதம் இணைக்க முடியாதவற்றுக்கு ஒரு கதியைக் காட்டியும், பொதுவில் தர்மங்கள் ஸர்வ லோகஹிதமாக நடைபெற ஒரு நிலையை ஏற்படுத்தினர்களே யன்றி, சட்ட ஸபைகளில் ஆக்கப்படும் சட்டங்களைப்போலவும் ராஜாங்கத்தரால் வெளியிடப்படும் அவஸர நிபந்தனைகளைப் போலவும், தமது அதிகாரத்தினாலாவது இச்சையினாலாவது எவ்வித நீதிகளையும் சாஸ்த்ரங்களையும் ஏற்படுத்தினார்கள் அல்லர். வேதத்தில் ஜாதி நிபந்தனைகளில்லை யென்றும் வேதகாலத்தில் எல்லாரும் ஸமமாக எதையும் செய்துவந்தன ரென்றும், பின்னர் ப்ராம்மணர் ஆதிக்யம் பெற்று ஸ்ம்ருதிகளைஏற்படுத்திக்கொண்டு மற்றவரையெல்லாம் தமது ஸௌகர்யத்துக்காக மூடர்களாயும் அடிமைகளாயும் வைத்து வந்தார்களென்றும், இப்படிப் பலவிதமான அவதூறுகளைச் சொல்லி வருவது ஸஹஜமாய் விட்டது. இது அறியாமையின் கார்யம். உலக நடப்பிலிருந்து தர்மசாஸ்த்ரங்கள் கோக்கப்பட்டனவென்பதை அவற்றை ஆக்ரஹமில்லாமற் படிப்பவர் அறிவார்கள். தர்மம் ஆசாரத்திலிருந்து (நடக்கையிலிருந்து) உண்டானதென்றார் மநு: உதாரணமாய், மநுஸ்ம்ருதியிலேயே ப்ராம்மணர் நான்கு வகுப்பிலிருந்து பெண்ணை மணப்பதுண்டென்று சொல்லிவிட்டு, அத்தகைய மணங்களில் முறையே செய்யவேண்டிய சடங்குகளையும் விவரித்து அடுத்தாப்போல்'சூத்ரஜாதிப் பெண்ணை மணக்கும் ப்ராம்மணன் அதோ கதியை யடைவான்; அதற்கு அவன் ப்ராயச்சித்தமும் செய்யமுடியாது'என்று முடிவு செய்யப்பட்டது. பிற்காலத்தில் யாஜ்ஞ்யவல்க்ய ரிஷி, தமது ஸ்ம்ருதியில் 'சிலர், த்விஜர்கள் எல்லாஜாதியிலிருந்தும் பெண் வாங்கலாமென்றார்கள். அது எனது மதமல்ல' என்று தெளிவாய் உரைத்துவிட்டார். இதனால் அநாதியாக இந்நாட்டில் ஸ்வஜாதிப் பெண்ணை மணப்பதுதான் அஸ்திவாரமான தர்மமென்று ஏற்பட்டது. இவ்விவாஹத்தில்தான் பாணிக்ரஹ

ணம் (கைப்பிடித்தல்) என்னும் ஸம்ஸ்காரமுண்டு. இது எல்லா ஜாதிக்கும் பொது விதி. ஆனாலும் இதர ஜாதிகளில் பெண் வாங்குகிற வழக்கமும் சிற்சிலவிடங்களிற் காணப்பட்டதினால், அதற்குரித்தான விதிகளைச் சேர்த்தெடுக்கவும் வேண்டியிருந்தது; அவ்வழக்கம் ஸநாதந தர்மத்துக்குத் தகாததென்பதைச் சொல்லவும் அவச்யமிருந்தது. விபரீத ருசியுள்ளவர்கள் எக்காலத்திலும் உளராதலின், இப்படிச் சேர்த்தெழுதியதை அநுமதியாக எடுத்துக் காட்டி, வரம்பில்லாத இச்சையே காரணமாகப் பெண்ணை எங்கிருந்தும் வாங்குவதையும் தர்ம விவாஹமெனத் தலைப்படவே, அது கூடாதென்றார் யாஜ்ஞுவல்க்யர். தன் ஜாதிக்குள்ளேயே கொள்வினை கொடுப்பினை செய்வதுதான் எவ்விதத்திலும் மேலானதென்பதை இப்போதும் ஒருவரும் ஆக்ஷேபிப்பதில்லையே!

இப்படியே நான்கு வர்ணங்களிலும் அகப்படாமல் வெகு நீடித்த பூர்வகாலம் முதல், நாட்டில் பாடலாடல்களைத் தொழிலாய்க்கொண்ட வேசியர் விஷயத்தில் ஸ்ம்ருதி கர்த்தாக்கள் சொல்லியிருப்பதைப் பார்த்தால், இந்த ந்யாயம் விளங்கும். புருஷன் ஆதிக்யத்துக்குட்பட ப்ரியப்படாததாலோ, விரக்தியுடன் கந்நிகளாயிருந்து பின்னர் புருஷர் தாக்கினால் வழுவினதாலோ விவாஹ நிபந்தனைக்குட்படாமல் ஸ்வதந்த்ரமாய்க் காலங்கழித்த இவ்வேசி ஜாதிக்கு அவர்கள் பரம்பரையாய் அநுஷ்டித்து வந்த ஆசாரத்தைத் திரட்டி, சொத்து அடையும் வார்சு க்ரமங்களையும் ஸ்ம்ருதிகர்த்தர்கள் வரைந்தார்கள். வேசியருக்கும், மற்ற ஜாதியாருக்கும் ஹிதமான செயல் இதுதான் அவர்களுக்கு ஸாத்யமானது. நம்மவரிற் சிலர் முழங்குவதுபோல் வேசித்தனத்தை அடியோடு ஒழித்துவிடுவது அவர்களுக்கு ஸாத்யமாகத் தோன்றவில்லை.

இதேமாதிரி விவாஹமில்லாமல் போகத்துக்காக வைத்துக்கொள்ளும் ஸாமாந்ய ஸ்த்ரீயிடத்தில் பிறந்தவர்களுக்குத் தந்தை சொத்தில் பாத்யம் கிடையாதென்பது எத்தேசத்திலும் எக்காலத்திலும் உள்ள நீதி. ஆனால் நம்தேசத்தில் நான்காவது ஜாதியாருக்கு ஸாமாந்ய ஸ்த்ரீயிடத்தில் பிறக்கும் பிள்ளைக்கும் பாகமுண்டு. இது ஸ்ம்ருதிக்காரர்கள் ஏற்படுத்திய விதியென்னவொண்ணாது. சூத்ரஜாதியாருக்குள் தொன்றுதொட்டு இருந்து வந்த ஸம்ப்ரதாயத்தைத் தர்ம சாஸ்த்ரம் எழுதியவர்கள் தொடுத்தெடுத்ததுமட்டுமே.

தர்ம சாஸ்த்ரங்களெல்லாம் முக்யமாய் முதல் மூன்று வர்ணத்தவர்களைப்பற்றியே பேசுகின்றன. மற்றவர்களைக்குறித்துச் சொல்லும் பாகங்கள் மிகக்குறைவே. அவர்களுடைய நடவடிக்கைகளும் ஸமயாசாரங்க

ளும் அவரவர்களுடைய தேசம் குலம் குடும்பம் முதலியவற்றில் பல பிரிவாய்ப் பரம்பரையாயிருந்து வந்த வழக்கங்களை அநுஸரித்தவையாதலின், ரிஷிகள் அவற்றில் தலையிடவில்லை. மற்ற ஜாதியாரோடு ஸம்பந்தப்படும் இடங்களில் மட்டும் வரையறை காட்டியிருக்கிறார்கள். மற்ற விஷயங்களில் இச்சாதியாருக்குத் தங்கள் பூர்வவழக்கமே (Custom) சட்டம். இக்காலத்தில் இத்தகைய வழக்கங்கள் சட்டரூபமாகவோ நீதிநூல் ரூபமாகவோ காணப்படவில்லை. அநுஷ்டானத்திலும் அவச்யமான இடங்களிலெல்லாம் மநுவும் யாஜ்ஞ்யவல்க்யரும் ப்ரவர்த்திப்பித்த ஸ்ம்ருதிகளையே ஆசாரத்துக்கும் வார்சு பாத்யம் முதலிய கோர்ட்டு நடவடிக்கைகளுக்கும் இவர்கள் அங்கீகரித்திருக்கிறார்கள். இப்போது சூத்ர ரெனப்படுவோர் பல வகுப்பினராயுளர். இப் பொதுவான ஸ்ம்ருதி தர்மங்களுடன், அந்தந்த வகுப்புகளில் அவரவர்களுக்கு உரித்தான தனிப்பட்ட வழக்க நிபந்தனைகளும் (Customary law) பல இருக்கின்றன. இத்யாதி காரணங்களை ஆலோசித்தால் மநு முதலிய ரிஷிகளிடத்தில் ஒருவரும் ஆக்ரோசப்படக் காரணமில்லை. தங்களுக்கென்று தனியாகத் தர்மசாஸ்த்ரங்களை ஏற்படுத்திக் கொள்ளும் வரையில் அவர்களை அநாதரிக்கவும் அவமதிக்கவும் அன்னாருக்கு இடமில்லை.

வர்ணாச்ரம தர்மங்கள் சில ஜாதியாருக்கு ஏதோ சில உரிமைகளை விசேஷமாக ஏற்படுத்தியதென்று ஸாமாந்யமாய்ச் சொல்வதும் பிசகு. அந்தந்த வகுப்பாரின் கடமைகளை விதிப்பதே வர்ணாச்ரம தர்மங்களின் முக்ய நோக்கம். தர்மம் என்பதற்குக் கடமை அல்லது விதிக்கப்பட்ட கார்யம் (duty) என்று அர்த்தம். பரலோக பலன்களுக்கு ஸாதநமாக சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களுக்கும் தர்மமெனப் பெயர். மநு ஸ்ம்ருதி ஆரம்பத்திலேயே, ரிஷிகள் ப்ருகுமநுவை க்ரமப்படி வணங்கி 'பகவானே எல்லா வர்ணங்களுடையவும், அவர்களுக்கு இடையிலுள் கலப்பு ஜாதியார்களுடையவும் தர்மங்களை வரிசையாகச் சொல்லவேண்டும்' என்று ப்ரார்த்திக்க, மநுவும், ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிப்ரகாரத்தைத் துடங்கி வர்ணித்துவிட்டு 'இந்த நாநாவித ஸ்ருஷ்டிகள் அடங்கிய ப்ரபஞ்சத்தின் ரக்ஷணத்தின்பொருட்டுத் தேஜோமயனாகிய ஸர்வேச்வரன் தன்னுடைய முகம் புஜம் துடை பாதங்கள் இவற்றிலிருந்துண்டான ப்ரஜைகளுக்கு அவரவர்களுக்குத் தக்கபடி தர்மங்களை ஏற்படுத்தினார்' என்று ஆரம்பித்துப் பதில் அளித்தார். இத்தர்மங்களில் ப்ராஹ்மணருக்கு ஏற்பட்டவை மிகக் கடினமானவை. இவர்கள் பிறர்களுக்கு வழி காட்டிகளாய்த் தர்மத்தைத் தாமறிந்து பிறர்க்குப் போதித்துத் தாமும் நடத்திக் காட்டி, வரம்பு மீறுகிறவர்களைத் திருத்த வேண்டியவர்களாய் ஜந ஸமூஹத்துக்கே சிரஸ்ஸாக விளங்க வேண்டியவர்களாகையால், இவர்களுக்கு ஆஹார

நியமம், விவாஹ நியமம், பிழைப்புக் கேற்பட்ட வ்ருத்திகள், அநுஷ்டிக்க வேண்டிய வ்ரதங்கள் முதலியன கடமையாக இருக்கவேண்டியதாயின. இவ்வளவு நிர்ப்பந்தத்தில் உலகவாழ்க்கையை நடத்தக் கட்டுப்பட்டவர்களை இதர ஜாதியார் வெகுமானத்துடன் பாராட்டுவது ந்யாயமும் அவசியமுமாகும். நெறி தவறின ப்ராஹ்மணன் விஷயத்தில் ஸ்ம்ருதிக்காரர்கள் சிறிதும் இரங்கியவரல்லர். இதுபோலவே க்ஷத்ரிய வைச்யர்களுடைய தர்மமும் அவரவர்கள் ஜோலிகளுக்குத் தக்கபடி அமைந்துளது. சூத்ரர்களுக்கு மேல் வர்ணத்தவருடைய சுச்ரூஷையினாலே எல்லாப் பலன்களும் கிடைத்து விடுவதால் அவர்கள் திறத்தில் தர்ம சாஸ்த்ரக்காரர்கள் ஒருவித் நிர்ப்பந்தத்தையும் விதிக்கவில்லை. பிறர்பேற்றில் கூறு கொள்பவர் அவரிடத்துச் சற்றுத் தாழ்வது கௌரவ ஹானியாகாது; ஆனால் ந்யாயமேயாகும். ஆகிலும், காலத்தின் நடவடிக்கைகளை அநுஸரித்தன்றோ விதிகளுண்டாயின. அக்காலங்களின் சூத்ரர்கள் நிலைமையில் அவர்களுக்கு ஏற்பட்ட தர்மங்கள் ஒத்தேயிருந்திருக்கக்கூடும். அது கொண்டே இப்போது அப் பெயரால் வழங்கப்படுவோரெல்லோரும் புத்தி குணம் முதலியவற்றால் குறைந்தவர்க ளென்ன வொண்ணாது. மஹா பாரதாதிகளில், சரீரத்தினால் ஏற்படும் ஜாதிபேதங்களும், அவற்றிற்குரிய தர்மங்களும், குண விசேஷங்களினால் உண்டாகக்கூடிய மனோ ஜாதி பேதங்கள் எப்பிறப்பு வர்ணங்களிலும் உண்டாவதும், அவற்றுக்கு ஏற்றபடி அவர்கள் விஷயத்தில் ப்ராஹ்மணரும் காட்டவேண்டிய மர்யாதைகளும் தனித்தனியே நமது அநுஷ்டானத்துக்காக உபதேசிக்கப்பட்டன. அவற்றை ஜந்ம ப்ராஹ்மணர் மறந்து செருக்கடையலாகாது; பிறரும் நோக்காமல் அஸூயாதிகளை வளர்க்கக் கூடாது. இதைக் கணிசித்தே பிற்பாடரான யாஜ்ஞவல்க்யர், சூத்ரர்களும் பஞ்சமஹாயஜ்ஞம் முதலிய கர்மங்களை வேதமந்த்ரங்க ளில்லாமல் நமஸ்காரத்தினாலேயே த்விஜர்களைப்போலவே நடத்தக் கடவர் என்று எடுத்துக் காட்டினார்.

மநு ஸ்ம்ருதி நான்கு வித புருஷார்த்தங்களையும் சொல்ல ப்ரவர்த்தித்தது. ஆகையினால் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியை ஆரம்பித்துப் பிறகு அதி நிலைக்காக ஏற்பட்ட வர்ணாச்ரம பேதங்கள், வர்ணாச்ரம தர்மங்கள், அவற்றில் ஐஹிக ஆமுஷ்மிக ப்ரயோஜனங்களைப் பெற ஸாதனங்களாக விதிக்கப்பட்ட தர்மாசாரங்கள் முதலானவற்றைப் பரக்கப் பேசி, கடைசி அத்யாயம் அவரவர்கள் தங்கள் தங்களுக்கமைந்த வர்ணாச்ரம தர்மங்களை வழுவாமல் நடத்துவதால் அடையும் பொதுவான உயர்ந்த பலன்களைச் சொல்ல, முன்னம் மனம் வாக்குக் காய மென்னும் த்ரிகாரணங்களுடையவும் ஸத்வ ரஜஸ் தமோ குணங்களுடையவும் கார்யங்களையும் புண்ய பாபரூப

கர்மங்களின் கதிகளையும் விவரித்து, அத்தர்மாநுஷ்டானங்களினால் பரம புருஷார்த்தமாகிய வீடு (மோக்ஷம்) என்னும் பெரும்பதத்தைப் பெறும் ப்ரகாரத்தையும் விளக்கி இப்ரபந்தம் தலைக் கட்டிற்று.

எல்லா தர்ம சாஸ்த்ரங்களுக்கும் மநு ஸ்ம்ருதி தான் மூலக்ரந்தம். மற்றவையெல்லாம் இதையே அந்தந்தக் காலங்களில் விளக்கப் பிறந்தவை. மற்ற ஸ்ம்ருதிகளில் இதற்கு விரோதமாகக் காணப்படும் இடங்கள் கட்டுப்படுத்தக் கூடிய்வையல்ல; அல்லது அவச்யமாயிருந்த சில விஷயங்களை உத்தேசித்துச் சிறப்பாகச் சொல்லப்பட்டவையாம். ஓரிடத்திற் சொல்லப்படாத தர்மம் அதற்கு விரோதமில்லாத மற்றோரிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படுவதும் சாஸ்த்ரம் அநுமதிக்கும் விஷயம்.

ஸ்ரீ:

# கம்பர்.

(திரு. அ. ராமகிருஷ்ண சடகோபதாஸர்.)

[தொடர்ச்சி 17-வது ஸம்புடம் 326 பக்கம்.]

இவ்வாறாகக் கம்பர் ஸ்ரீராமபிரானது அனந்த திவ்விய கல்யாண குணங்களில் ஈடுபட்டு இனிய பாடல்களை இடையிடையே பாடிச்சென்று, தமது இராமாயண கட்டிடத்தைக் கட்டி முடிக்கின்றார். ஆக இத்யாதிகளால், கம்பர், வேதவேதாந்தங்களில் நம்பிக்கை உடையோர் என்றும், அவைகளிற் பிரதிபாதிக்கப்படுகின்ற நாராயணக் கடவுளே ஒப்புயர்வற்ற முழுமுதற்கடவுளாம் என்றும், அக்கடவுளே

† "சாவாது பிறவாது தனிமுதலா யிருந்தவனுன்
ஆவாது உலகுபடு பழிதுயர்தீர்ப் பதற்காக
மேவாது நின்றேபெண் மாயையினால் மெய்போல
ஓவாது பிறந்திடுவ னுகந்தோறு முகந்தோறும்"

என்றபடி, உலக நன்மையின் பொருட்டுத் தமது ஸ்வேச்சையால் அவதாரங்கள் பல எடுக்கின்றார் என்றும், இவ்வவதார நுண்மை யறிந்தே, "பிறப்பில் பல்பிறவிப் பெருமாயன்" என்றும்,

† பகவற்கீதை, 4-ம் அத். செ. 7. ஷி, சு: 6, 7, 8, இவைகளைப் பார்க்க.

‡ "மனப்பரிப்போ டழுக்கு மானிட சாதியிற் றன்பிறந்து
தனக்கு வேண்டுருக் கொண்டுதான் றனசீற்றத்தினை முடிக்கும்
புனத்துழாய் முடிமாலை மார்பனென் னப்பன்றன் மாயங்களே
நினைக்கும் நெஞ்சுடை யேனெனக் கினியார் நிகர் நீணிலத்தே?"

என்றும், காரிமாறப் பிரான் அருளியதூஉ மென்றும், விதிசிவாதிகள் அக்கடவுளுக்கு அந்தர்ப்பூதர் என்றும், அக்கடவுள் உலகெல்லாம் உயிரெல்லாம் நிறைந்து நிற்பதாகலின், உயரிய நோக்குடையோராய், ஒரே மன நிலையுடையோராய், பிறமூர்த்தி பிறமதம் துவேஷங் கொள்ளாது, அக்கடவுளையே உபாசிப்போர் என்றும், அக்கடவுளது அம்சமாகிய ஸ்ரீராமன்பால், மாறு வேறில்லா வைராக்கிய பக்திமய சமரச நெஞ்சுடையோர் என்றும் அறிகின்றோம் அன்றோ?

இப்படிப் பரதேவதையான ஸ்ரீராமனது அளப்பரிய திவ்விய கல்யாண குணங்களை யாவரும் உணரும்படி செய்து, வைஷ்ணவ சமயத்து உயர்ந்த கருத்துக்களுக் கிணங்கவே, நமது சமூகத்திற்குக் கழி பேருதவியைச் செய்திருக்கின்றார். இதனால், தமிழ் மக்கள் புதிய உணர்ச்சி பெற்று, ஸ்ரீராம விக்கிரகத்தைத் தங்கள் தங்கள் இல்லந்தோறும் அமைத்து வழிபடலாயினர். படவே, சமய உணர்ச்சியும் தெய்வ உணர்ச்சியும் தமிழ்மக்க ளிடையே ஒருங்கு நிரம்பின. அப்படியானால் கம்பர்,

1. "பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்
முற்றவா னுணர்வுமேன் முடுகினா ரறிவுசென்
றுற்றவா னவனிருந் தியோகுசெய் தனனெனிற்
சொற்றவா மளவதோ மற்றிதன் றூய்மையே" என்ற இடத்திலும்,

2. "கரந்தை மத்தமோ டெருக்கலர் கூவிளை கடுக்கை
நிரந்த பொற்சடை நின்மலக் கொழுந்தினைநினையா," என்றஇடத்திலும்,

3. "மூவராய் முதலாகி மூலமதாகி ஞாலமு மாகியத்
தேவதேவர் பிடித்த போர்வில் ஒடித்த சேவகர்," என்ற இடத்திலும்,

4. "உழந்த யோகத் தொரு முதல் கோபத்தால்" என்ற இடத்திலும்,

---

‡ திருவாய்மொழி 6-ம் பத்து, 4-வது திருப்பதிகம், 7-ஞ் செய்யுள்.
1. பாலகாண்டம்: தாடகை வதைப்படலம். செ. 3
2. ஷை: அகலிகைப் படலம், செ. 52
3. அயோத்தியா காண்டம்: கைகேயி சூழ்வினைப் படலம். செ. 62
4. ஆரணிய காண்டம்; அயோமுகிப் படலம். செ. 26,

சிவபெருமானை மேம்படுத்திக் கூறியது என்பற்றியோ என்னில்: மேலே யாம் எடுத்துக் கூறியவாறு கம்பருக்கு மூர்த்தித் துவேஷம் இல்லை. சில சந்தர்ப்பங்கள் வருமாயின் அவரைத் துவேஷம் பாராட்டாது மதிக்கின்றார். சிவனும் விஷ்ணுவும் சமானர் ஆதலின், சமானம் என்பது உபசார வழக்கு. வேதங்களில் பிற கடவுளது வணக்கமும், மேன்மையும், உபசாரமாக ஆங்காங்கு பெறப்படினும், அவ்வேதப் பொருள் நாராயணனே என நிச்சயிக்கப் படுதலால், கம்பர், சிவபிரானையும் மதிப்பிட்டு உபசாரமாகக் கூறிய தத்தனையே யல்லது வேறில்லை யென்க. மேலும், விஷ்ணு பாரம்மியத்தைக் கம்பர் பல விடங்களிலும் சிறப்பித்துக் கூறியவாறுபோல், சிவபிரானைக்கூறினார் இல்லை. மேல், 'மூவராய்' என்ற செய்யுளில், சிவபிரானை உயர்த்திக் கூறினாரேனும், அவ் வுயர்ந்த சிவனது வில்லை மிக எளிதில்—ஒரு நொடியில்—ஒடித்த வீரன் என்று ஸ்ரீராமனையே சிவபிரானினும் மேம்படுத்தினமையை உய்த்துணர்க.

அதுவேயுமன்றி, இச் செய்யுள்களை, வெள்ளியம்பலத் தம்பிரான் என்ற ஒரு வீர சைவர், கம்பராமாயணத்தில் இடைச் செருகலாகச் சேர்த்தார் என்று சில வித்வாமிசர் ஒதுக்குகின்றனர். இது நிச்சயம் ஆயினும் ஆகுக; பொய்யாயினும் ஆகுக. சில சந்தர்ப்பங்களில், இரண்டோர் இடங்களில், உபசாரமாகக் கம்பர் இங்ஙனம் கூறியதினின்றும் உயர்ந்த அவரது உண்மைக் கருத்தைப் பிழைபடச் செய்யற்க என்பதே எமது வேண்டுகோள்.

இனியொரு சாரார்,* "அரனதிக னுலகளந்த அரியதிகன் என்றுரைக்கும் அறிவி லோர்க்கு" என்ற செய்யுளை எடுத்துக்கொண்டு, 'கம்பர் சைவரும் அன்று; வைஷ்ணவரும் அன்று; பொது நோக்குடையோரே;' என்பர். இச்செய்யுள், கம்பரது வாக்கு அன்று. இது ஒன்றுக்கும் பொருந்தாத ஒருவகைச் செய்யுள். கம்பர் மிக உயர்ந்த தத்துவக் கொள்கையில் ஈடுபட்டவராதலின், ஓர் அற்ப விஷயத்திற்காக இதனைப் பெய்யமாட்டார். மற்று ஏதேனும் சிறந்த ஒரு உவமையைக் கொடுத்திருக்கலாம். காலக் கொடுமையால் அது மாறி யிருக்கலாம். சிலர் இச் செய்யுள் விஷயமாகப் பிரமாதப் படுத்துகின்றனர். அன்னோர், வைஷ்ணவ மதத்தின் உயர்ந்த கருத்தையும், அக் கருத்தை அநுசரித்து நடக்கின்ற கம்பரது அகப்புற வாழ்க்கையினையும், நண்கு உணர்வரேல் அங்ஙனம் பிரமாதப் படுத்தார். திருச்சிராப்பள்ளியில் எமக்குக் கிடைத்த ஓர் ஏட்டுப் பிரதியில் இந்தச் செய்யுளைக் காணேம்.

* இது கிஷ்கிந்தா காண்டம்: நாடவிட்ட படலத்தில் 24-ம் செய்யுளாக அச்சுப் பிரதிகளிற் காணப்படுகின்றது.

அது கிடக்க. இந்த ஒரு செய்யுளைக் கொண்டே கம்பரது உபரிய கருத்தைத் வழுப்படுத்தாமல் இருக்க யாம் பெரிதும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எனவே, கம்பர், சைவரும் அன்று; கேவலம் பொது நோக்குடையவரும் அன்று, மற்று அவர், சாந்த மனங் கொண்ட, தெய்வபக்தி உடைய, உயர்ந்த ஒழுக்கம் நிறைந்த, சமரசபாவ பாகவதோத்தமராகிய, சிறந்த ஒரு ஸ்ரீ வைஷ்ணவப் பெரும்புலவர் என்றே தெற்றென உணர்தற் பாற்று.

இனிக்கம்பர்,

1. "..........................................................................
செங்கண்மால் நான்முகன் சிவனென்றே கொலோ
எங்கணு யகனையும் நினைந்த தேழைநீ" என்றும்,

2. "சொல்லிய அணிவரு மல்ல ஷசொன்னவப்
புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்;
.........................................................................." என்றும்

3. "சிவனோ அல்லன்; நான்முகன் அல்லன்; திருமாலாம்
அவனோ அல்லன்;..........................................................
.........................................................................." என்றும்,

ஸ்ரீராமனை மூவர்க்கும் அப்பாற் பட்டவராய்க் கூறி,

4. மூலமு நடுவு மீறு மில்லதோர் மும்மைத் தாய
காலமுங் கணக்கு நீத்த காரணன் கைவி லேந்திச்
சூலமுந் திகிரி சங்குங் காகமுந் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட் டயோத்தி வந்தான்"

என்று மூவர்தம் ஆற்றலையும், ஓர் ஆற்றலாகக் கொண்டு அவதரித்தான் என்றாராலோ என்னில்: இறைவன் ஒருவனே; அவன்றான் வேதங்களில் பிரதி பாதிக்கப்படுகின்ற பரதேவதையான ஸ்ரீமந் நாராயணன். அவனுக்குப் படைத்தலும் அழித்தலும் பெரிதன்று; படைக்கப்பட்ட பொருள்களையே காப்பாற்றுவது தான் கடினம். அரசன், பல நாடு

1. சுந்தர காண்டம். சிந்தனைப் படலம்: செ. 49.
2. ஷ பிணிவீட்டுப் படலம்: செ. 74.
3. யுத்தகாண்டம்: இராவணன் வதைப்படலம்: செ. 135.
4. சுந்தரகாண்டம்: பிணி வீட்டுப்படலம். செ. 80.

களைத் தன் வலிமையால் எளிதில் ஜெயித்துக் கைப்பற்றிக் கொள்ளலாம், ஆனால், ஒவ்வொருவருடைய நோக்க மறிந்து பக்ஷபா தமின்றிக் காப்பாற்றுவது. தான் கடினம் என்பது பிரத்யக்ஷா நுபவம். தன்னுடைய நுண்ணிய அறிவின் வன்மையால்தான், அவன் தேசத்தை ஒழுங்குபெறக் காப்பாற்றல் வேண்டும். அதுபோலவே, இறைவன், தான் படைத்திட்ட ஒவ்வோர் உலகையும், ஒவ்வோர் உயிரையும், அதனதன் தாரதாரத்திற்கேற்ப,—அறிவாற்றலுக் கேற்ப—ஒழுங்கு பெறக் காப்பாற்றுதல் அவனது பெருங்கடமையாகும். ஆதலின் காத்தல் தொழிலே சிறந்ததாகும். இறைவனாகிய நாராயணனே, விஷ்ணு என்னும்பெயரால்,பிரம சிவர்களைத் தனது வலத்திலும் கொப்பூழ்த் தாமரையிலும் வைத்துக்கொண்டு உலகம் நடாத்துகின்றான். இங்கே,

‡ "வலத்தனன் திரிபுர மெரித்தவ னிடம்பெறத் துந்தித்
தலத்தெழு திசைமுகன் படைத்தநல் லுலகமுந் தானும்
புலப்படப் பின்னுந்தன் னுலகத்தில் அகத்தனன் தானே
சொலப்புகி லிவைபினும் வயிற்றுள விவையவன் துயக்கே"

என்ற அருளிச்செயலையும் நோக்குக. எனவே விஷ்ணுவே எல்லாத் தொழில்களையும் நடாத்துபவன் ஆம். கம்பரும், மீட்சிப்படலத்திலே பிரமன் துதியில் இதனையே வற்புறுத்திக் கூறுகின்றார்.

இதுகொண்டு கம்பர், நாராயண அம்சமாகிய ஸ்ரீராமனையும் "நின்று பல்லுயிர் காத்தற்கு நேர்ந்த யான்" என்று அவனே கூறுமாறு, அவனது உயர்ந்த தொழிலாகிய காத்தலையும், விதந்தோதிச் செல்லுகையில், தொழின் முறைக்காகப் பிரித்தெண்ணப்பட்டவரும், அவனோடு சம்பந்தப் பட்டவரு மான பிரமன், விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று தேவர்களும் அந்த ஒரே கடவுளின் கூற்றினர் ஆதலின், ஸ்ரீராமன் இவர்களை அதிஷ்டித்தே அப்பால் நிற்கும் தனிப்பெருங் கடவுள் என, அவரிடம் தமக்கிருக்கும் அபார அன்பினால், ஒரு சமயத்தில் தனித்தும், மற்றொரு சமயத்தில் இம் மூவர்களுடன் சம்பந்தப் படுத்தியும் கூறி, இந்த மூவரும் அவரே தான் என்று சூசிப்பித்து, பிறகு, முழுமுதற் பொருளாகிய நாரயணனோடு ஒன்றித் தெண்ணும்பொருட்டே இவ்வாறு மொழிந்தனர் என்க. நம்மாழ்வாரும்,

1. "திருமால்! நான்முகன் செஞ்சடையா னென்றிவர்களெம்
பெருமான் றன்மையை யாரறிகிற்பார்? பேசியென்

---

‡ திருவாய்மொழி 1, 3, 9.
1 திருவாய்மொழி 8, 3, 9.

ஒருமா முதல்வா! ஊழிப்பிரான்! என்னையாளுடைக்
கருமாமேனிய னென்பனென் காதல் கலக்கவே"

என்று இறைவனை, இம்மூவர்க்கும் அப்பாற்பட்டவன் என்று கூறிப் பின்னர்,

‡ "ஒளிமணி வண்ண னென்கோ! ஒருவனென் றேத்த நின்ற
நளிர்மதிச் சடையனென்கோ! நான்முகக் கடவு ளென்கோ!" என்று
அவ்விறைவனை மூவருடன் உடன்படுத்தியும், பிறகு,

"கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணுந் திருநாமம்
திண்ணம் நாரணமே."

என்று அப்பொருளைத் தனித்தும் அருளிச் சென்று, ஆங்காங்கே விஷ்ணு பாரம்மியத்தை விடாது பெருமையாய் ஓதி, அவ்வாற்றான் இறை நிலைபைத் தெரிக்கின்றார்.

இந்த ஒப்புமைகளைக் கண்டால், கம்பர் சைவரென்றும், பொது நோக்குடையோர் என்றும், இஷ்டப் பிரகாரம் பலபடியும் பேசவருமோ? நம்மாழ்வாரை ஸ்ரீ வைஷ்ணவ மத சித்தாந்த ஸ்தாபகர் அல்லர் என்போமா? நம்மாழ்வாரை எப்படி ஸ்ரீ வைஷ்ணவ மதத்திற்குப் பரமாசாரியர் என்கின்றேமோ, அப்படியே அவரை அந்தரங்க ஆசான் எனக் கொண்ட கம்பரையும், ஆசாரிய புருஷர் என்னுவிடினும், ஸ்ரீ வைஷ்ணவ மதத்திற்குப் பெரியதோர் உதவியைச் செய்த நற்பெரும் புலவர் என்றே கூறுதல் வேண்டும்.

இனிக் கம்பர், துவைத அத்துவைத விசிஷ்டாத்துவைதக் கொள்கையில் எதனை அநுசரித்தவர் என்றால், அவர் விசிஷ்டாத்துவைத தத்துவத்தையே அநுசரித்தவர்என்றும், அக்கொள்கைத் தெய்வம், விஷ்ணுவே என்றும் கூறுதற்கு, அவர் நூலில் வரும் அநேக செய்யுள்களே போந்த சாட்சியங்கள் ஆகும். "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்" என்றமையால், உலகங்கள் எப்போதும் உள்ளவைகளாகவே ஆக்கப்பட்டவை என்பதும், "உலகு தந்தானும் பல்வேறு உயிர்கள் தந்தானும்" என்றமையால், உலகங்கள் இருப்பன போலவே உயிர்களும் உள வென்றும், அவை எண்ணிறந்தன என்பதும், இறைவர்க்கு வேறுபட்டவை என்பதும், இந்த உல

‡ திருவாய்மொழி: 3. 4. 8.
* ஷை : 10, 5. 1.

கங்களையும் உயிர்களையும் இயக்கும் ரக்ஷக கர்த்தா அலாதியான தனித்த ஒரு பெரும் முழு முதற்பொருள் என்பதும், அப்பொருளே ஸ்ரிய: பதியாகிய நாராயணனென்பதும் அந் நாராயணனை அடைவது தான் உயிர்க்குச் சிறந்தது என்பதும், அவன்றன் கல்யாண குணங்களை அநுபவித்து ஆழ்தலாகிய பேரன்பாம் பக்தியொன்றினால் தான் அவனை அடையலாம் என்பதும் எல்லாம் அப் புலவர் பெருமானாகிய கம்பருடைய கொள்கைகளே. நுண்மையறியாது இவரை அத்துவைதி என்று சிலர் கூறுவன வெல்லாம் பிதற்றுரைகளேயாம்.

மேற்கூறிய மூன்று மத சித்தாந்தங்களைப் பிரித்து உண்மை காணுமிடத்து, "உலகம், உயிர், இறைவன், என்னும் முத்திறப் பாகுபாட்டினைப் பிரித்துக் கூறும் விசிஷ்டாத்துவிதக் கொள்கையை ஒருவன் அநுசரித்து நடக்கும்போது, உயிர், (ஆத்மா) ஞான ஏதுவினால் உலக நிலையாமையை உணர்ந்து அதனை மறந்து, தானும் இறைவனுமாகத் துவைதமாய் (இரண்டாய்) நிற்கும்; பின்னர் இறைவன் திருவருள் நோக்கத்தால் அவ்விறைவனிடம் அன்பு மீதூரப்பெற்று, தன்னையும் மறந்துபோய் அவனுடைய ஞாபகத்தில் மட்டில் பொருந்தி, அவனோடு ஒன்றிய (ஐக்கியப் பட்ட) அத்வைதமான (ஏகமான) தன்மையில் விளங்கி நிற்கும்." என்று பொருள்படும். இம்மும்மத சாரங்களும் இதுவேயாகும். இங்ஙனம் உலகத்தை மறந்த இறைவனும் தானுமாகிய த்வைத உணர்ச்சியும், தன்னையும் மறந்த இறைவன் நினைவாகிய அத்துவைத உணர்ச்சியும், விசிஷ்டாத்துவிதத்திலேயே பெறப்படுகின்றன. பெறவே, விசிஷ்டாத்துவைத ஞானம் இல்லாத ஏனை த்வைத அத்வைத ஞானங்கள் பயன்படா; த்வைத அத்வைத விபரீதார்த்தங்களை யிட்டு இறைமைக் குணத்தைப் (பரமார்த்த ஸ்வரூபம்) பிழைபட வழங்குவதிலும் பயன் ஏதும் இல்லை. ஓர் உயிர், தான் சிறந்ததொரு பதத்தைப் (மோக்ஷத்தை) பெறவேண்டுமென்ற உணர்ச்சியை விரும்புமாயின், உலகியல் ஞானமும், உயிரியல் ஞானமும், இறை யியல் ஞானமும் அதற்கு அவசியம் வேண்டற்பாலனவே. அது, உலகியல் ஞானமின்றி, உயிரியல் ஞானத்தைப் பெறாது; உயிரியல் ஞானமின்றி, இறையியல் ஞானத்தை உணராது என்க. எனவே பிறர் கூறுமாறு, உலகம் வெறுந்தோற்றமாயின், உயிரும் அப்படியே முடியும். இவ்விரண்டும் பொய்த் தோற்றங்கள் என்னில் கடவுளும் பொய்த்துப்போம். கடவுளே உயிர் என்றும், அவ் வுயிர் ஏகமென்றும் கூறினால் 'அஞ்ஞானம்' என்றதையும், 'கடவுள்' என்றதையும் பற்றி அன்னோர் கூறலாகாது. ஏன் ? கடவுளேஉயிர்; உயிரே கடவுள் என்னும் அவரது மதமாகிய 'மாயாவாத' உணர்ச்சி பெறப்படுதலால் என்க,

ஆதலாலே இறைவன் வேறு, உயிர் வேறு என்று பிரித்துக் கூறியும், உயிர்கள் பலவென்றும், அவ்வுயிர்கள் வாழும் உலகங்கள் பல வென்றும் கூறியும் நடை பெறுகின்ற விசிஷ்டாத்துவைத த்துவக் கொள்கையே சாலச் சிறந்ததாம். ஆகவே, உலகத்தை மறந்த உயிர், தானும் கடவுளும் வேறு வேறு பொருளனவா யிருப்பினும், ஆணும் பெண்ணும், தனித் தனி உடலாய்த் தனித் தனி உயிராய் இருந்தாலும், புணர்ச்சிக் காலத்து இன்பநுகர்ச்சி அளவில், இருவர் உணர்ச்சியும் ஒன்றாயமைந்தது போலவே, பேரின்பம் என்னும் தூயதோர் இன்பநுகர்ச்சியிலே இறையும் உயிரும் கலந்தும் கலவாத ஏகமாய்க் காணப்படும். காணவே, இவ்விரு பொருளும் ஒன்றாகா தென்ற நுண்பொருள் உணர்ச்சி ஏற்படும்.

(இன்னும் வரும்)

ஸ்ரீ:

# கடிதங்கள்

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு—

॥ ஸம்ஶயொச்சித்தி: ॥

நடந்த ஸஞ்சிகையில் 'சில ஸம்சயங்கள்' என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீ. உ. வே. வித்வான் தட்டை ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி த்ரிசிரபுரியிலிருந்து பத்ராதிபருக்கு எழுதிய கடிதம் ப்ரசுரித்திருப்பதைப் பார்த்தேன். அதில் கண்டிருக்கும் ஸம்சயங்களுக்கோ அல்லது பிரச்நங்களுக்கோ தகுந்த உத்தரங்களை ஸங்க்ரஹமாகக் கீழே வெளியிடுகிறேன். விஷயத்திற்கு ப்ரஹ்மண: அபிந்ந நிமித்தோபாதாநத்வம் என்று பெயர் கொடுக்கப்பட்டிருப்பதால் அதில் அடியேன் எழுதியபடி அபிந்ந பதத்தைக் கார்யபரமாக வைத்து விக்ரஹம் பண்ணினால் தான் பதங்களுக்கு ஸார்த்தக்யம் ஏற்படுவதுடன் லக்ஷ்யமாணார்த்த இதர மத வ்யாவ்ருத்த ஸ்வமத ஸார ஸூசநமும் ஏற்படும். ப்ரஹ்மண: நிமித்தோப தாநத்வம் என்றாலே ப்ரஹ்ம நிஷ்டம் த்விவித காரணத்வம் என்றேற்பட்டு விடுமாகையால் அபிந்நபதமோ, அபிந்ந பதத்தைக் காரணபரமாக ஆக்கினால் ப்ரஹ்மண: என்ற பதமோ வ்யர்த்தமாகும். கார்யபரமாக வைத்தால் வைசேஷிகாதி மத வ்யாவ்ருத்தி ஏற்படும். அவர்கள் ப்ரஹ்ம நிஷ்ட ஸம்யோகரூப அபிந்ந கார்யத்தைக் குறித்து ப்ரஹ்மண: நிமித்தோபாதாநத்வம் ஒப்புக்கொண்டாலும் அபிந்ந கார்யத்தை என்பதற்கு

அபின்ந தர்மாவச்சின்ந கார்யத்தை என்றர்த்தங் கொள்ளலாமாகையால் தாத்ருச கார்யம் ப்ரதி நிமித்தோபாதாநத்வம் அவர்கள் ஒப்பவில்லையாதலால் தந்மதவ்யாவ்ருத்தி ஏற்படும். ஆகையால் கார்ய பரமாகவே வைத்து விக்ரஹ வாக்யம் எழுதப்பட்டது. காரணபரமாக எவ்விடத்திலாவது அபிப்ராயப்பட்டிருப்பதாக ஏற்பட்டாலும் அவ்விடத்தில் 'ப்ரஹ்மண:' என்ற பதம் இருந்திராது. மற்றப்படி அடியேன் எழுதிய விக்ரஹ வாக்யத்தில் சப்த சாஸ்த்ர விரோதமொன்றும் இருப்பதாகக் காட்டவில்லை. ஆனால் விவரண வாக்யத்தில் அபின்ந கார்யத்தை அதாவது 'ஒரே கார்யத்தை' என்றுசொல்வது ஸரியா என்றுஎழுதியிருக்கிறார், காரணஸ்ய கார்யேண ஸஹைக்யம் என்ற ஸ்தாநத்தில் காரணஸ்ய கார்யாபி ஹிதத்வம் என்ற ப்ரயோகம் உண்டு. " கார்யைக்யேஹி ப்ரதிஜ்ஞா " என்று அதிகரணஸாராவளி. "ஸ்வ கார்யகாரணயோஸ் தாதாத்ம்யவாதிநாம்; ஏதந்நிமித்த காரண பக்ஷேபிகம் ததயோரைக்ய ஸமர்த்தநாய " என்று ஸ்ரீமத் பாஷ்யார்த்த மணிப்ரவாள தீபிகா. அபேத ஸமர்த்தநாய என்ற விடத்தில் 'ஐக்ய ஸமர்த்தநாய என்று ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது.

2. பஞ்சமிக்கு உபாதாநத்வம் அர்த்தமாகச் சொல்வது பாணிநீய வ்யாகரண ப்ரக்ரியைக்கு இணங்காது என்று மாத்ரம் எழுதப்பட்டிருக்கிறதே தவிர இணங்கின அர்த்தம் எது என்பது எழுதப்படவில்லை. கர்மணி த்விதீயையும் கர்த்தரி த்ருதியையும் விதிக்கப்பட்டிருந்தாலும் த்விதீயை த்ருதீயைகளுக்கு கர்மத்வ கர்த்ருத்வங்கள் அர்த்தங்களாகச் சொல்வது போல் உபாதாநத்வம் அர்த்தமாகச் சொல்லப்பட்டது. இப்படியே ஹேதுத்வ மாத்ரபரம் என்றும் எழுதியிருக்கிறேன். அபாதாநே பஞ்சமீ விதித்திருந்தாலும் உபாதாநத்திற்கே அபாதாந ஸம்ஜ்ஞை விதித்திருப்பதால் அவ்விடத்தில் பஞ்சமிக்கு உபாதாநத்வமோ மதபேதேந உபாதாநமோ அர்த்தம் என்று அபிப்ராயப் பட்டிருக்கிறார்கள். ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹே, "ஸூத்ரகாரோபி ததுபாதாநத்வ ம்ருத்ஸோபாநந்யாவிஸோ ஜகதிஷ, யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே; ந ஹி பஞ்சமீ உபாதாநத்வ மாத்ராவிஷயிணீ " இத்யாக்ஷிப்ய தாத்ருஶாக்ஷேபம் பரிஹரத்ய " ஜநிகர்த்து: ப்ரக்ருதி: இதி ஜநிகர்த்ருத்வேந உபாதாநத்வ ஜேவாஹியீயதே " இதி நிகமிதம். சததூஷணீ சண்டமாருதத்திலும் " கிம் ச யதோவா இமாநீதி பஞ்சம்யுபாதாந வாசி" என்றும், ச்ருத ப்ரகாசிகையிலும் "பஞ்சம்யா உபாதாநாபிதாநாத் " என்று மிருக்கிறது.

நிற்க ஷஷ்டி ஸம்சயத்தில் "பஞ்சம்யந்த பதத்தினால் வாச்யமான அர்த்தத்திற்கு அபாதாந ஸம்ஜ்ஞை வரின் அதற்கு வாசகமாக இருக்கிற பதத்தைக் காட்டிலும் பஞ்சமீ வருகிறது" என்று எழுதப்பட்டிருக்கிறது. எழுதியிருக்கிறபடி அபாதாந வாசக பதம் பஞ்சம்யந்தந்தானே ஆகும். அதைக்காட்டிலும் பஞ்சமி வருகிறது என்றால் பஞ்சம்யந்தத்திற்கு மேல் பஞ்சமீ வருகிறது என்றல்லவோ அர்த்தம் ஏற்படுகிறது. இது ஸரியா?

3. "இஷ்டஸித்தியின் பொருட்டே யோக விபாகமேயொழிய ஜ்ஞாபக மிருந்தால் தான் யோகவிபாகம் என்பது ஒருவராலும் ஒத்துக்கொள்ளத் தக்கதன்று" என்று எழுதியிருக்கிறார். இஷ்ட ஸித்யர்த்தம் யோகவிபாகம் என்றதால், யோகவிபாகம் இல்

லாவிட்டால் இஷ்டஸித்தி ஏற்படாதவிடத்தில் தான் யோகவிபாகம் ஆச்ரயிக்கவேணும் என்றேற்படுகிறது. தஸ்மாத் த்ருஷ்டாந்ததயா ஸித்தயோகவிபாகஜ்ஞாபகம் என்று ஏற்படவில்லையா? இதையே ஸூத்ரயோரானந்தர்யானுவ்ருத்தியோக விபாகஜ்ஞாபகம் என்றும் சொல்வதுண்டு. சண்டமாருதத்தில் "நசைவம் தத்ர ஸர்வ (யோக விபாகாதேவ) ஸமஸ்தஸித்தௌ, யோக விபாகஸ்ய உபயோகேன ஸூத்ரப்ரத்யக்ஷவிருத்தவைக்ஷ்யா அனுபபத்யமானத்வாத்; தத்விஷயத்வேபி ஸூத்ரயோரானந்தர்யானுவ்ருத்திகல்ப்யம்" என்றிருக்கிறது. ஜன்மாத்யதிகரண பாவப்ரகாசிகையிலும் "யோக விபாகே ச ஜ்ஞாபகம் ஹேது ஸந்நிஹிதஸ்யைவாந்வய ஸ்யோசிதத்வ ஸூத்ரஹேது ஸூத்ரக்ரஹணம்" என்றும், மேல் "தேந விவாத ஹேதுரிதி நிர்தேசோ ஜ்ஞாபகோ விபாகேதியோக விபாகஸ்ய" என்று மிருக்கிறது. க்ரந்தங்களிலிருந்து ஜ்ஞாபகமிருந்தால் தான் யோகவிபாகம் ஆச்ரயிக்கவேணுமென்று ஏற்படவில்லையா?

ஆகவே அடியேன் எழுதினது பூர்வர்களின் வழிக்குத் தப்பவில்லை யென்பதை தீபிகையின் நியமத்தை அநுஸரித்து ஸங்க்ரஹமாய் எழுதினேன். இதை அந்த ஸ்வாமி திருவுள்ளம்பற்றுவதோடு விஷயத்தின் அவசிஷ்டாம்சத்தையும் ஸம்யக் கடாக்ஷித்தருள வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

ஸ. ஸ்ரீ. ரங்கநாத ஸிம்ஹதாஸ:,
"ந்யாயசிரோமணி"

---

## ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்.

### மோக்ஷோபாயம்.

ஸ்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களில் பரம புருஷார்த்தமான மோக்ஷத்தின் உபாயங்கள் பலவாருகச் சொல்லப்படுவதாகத் தோன்றுவதால் அவைகளை விசாரித்துத் தீர்மானித்து அநுஷ்டிக்கவேண்டியது அவச்யமாகும்.

1. "சாதுர்மாஸ்யயாஜின: அக்ஷய்யம் ஹ வை ஸுக்ருதம் பவதி", என்றும் "அபாம ஸோமம் அம்ருதா அபூம" என்றும் சில வேதவாக்யங்கள், சில யாகத்தைச் செய்வதால் மோக்ஷம் ஸித்திப்பதாகச் சொல்லுகின்றன.

2. "ஸிதாஸிதே யத்ர ஸங்கதே" என்கிற வேதமானது, கங்கா யமுநா நதிகளின் ஸங்கமத்தில் ஸ்நாநம் செய்தால் ஸ்வர்க்கம் கிடைப்பதாகவும் அங்குத் தேகத்தை விட்டவனுக்கு மோக்ஷம் கிடைப்பதாகவும் சொல்லுகிறது.

3. "அயோத்யா மதுரா மாயா" என்கிற வாக்யமானது சில புண்ய க்ஷேத்ரங்களில் வஸித்தவனுக்கு மோக்ஷம் கிடைக்குமென்று சொல்லுகிறது. இதை

'முத்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சிதன்னில்'' என்று ஸ்ரீதேசிகனும் அருளிச் செய்தார்.

4. ஸ்ரீ விஷ்ணுபுராணுதிகளில் "கீத-நாஜெவ கூரஷண ஸ்ரீ உ-கூபஂயஃ வஶஂ வ்ரஜெக" என்றும், "கமுளஸஂகீத-ஸ்ரீகெஶவஂ" என்றும், "மொய்த்த வல்வினையுள் நின்று"என்றும் சில ப்ரமாண வாக்யங்கள் நாம ஸங்கீர்த்தநத்தினுலேயே மோக்ஷம் வருவதாகச் சொல்லுகின்றன.

5. ஜாபகோபாக்யாநத்திலும், "ஸுஷ்ாவி ந நிலத-ஜெ ஆஷஶாக்ஷர ஜிகாஃ" என்கிற மற்றும் சில வாக்யங்களும் த்வாதசாக்ஷராதி மந்த்ர ஜபத்தினுல் மோக்ஷஸித்தியைச் சொல்லுகின்றன.

6. "வெஷணவொ-நஃ கூ-ஜொத ஸ்ரஷ்ஸுஷாஶயிஷ்ஸ்ரீ" என்றும், "ஸூஸ்ஹிஃ விதாவஶதஃ விதூஸ்ரஹ தெஃநவ" என்றும் சில வாக்யங்கள், வைஷ்ணவஞன புத்ரன் வம்சத்தில் பிறந்ததால் பித்ருக்களுக்கும் மோக்ஷஸித்தியைச் சொல்லுகிறது.

7. "வஶா-உ-ந-ஷ்யஃ வக்ஷீவா யெ அ வெஷணவ ஸஂஶ்ரயாஃ। தெநைவ தெ வ்ரயாஸ்யந்தி தஜிஷ்ணோஃ வஶஂ வஃ॥" என்று வைஷ்ணவ ஸமாச்ரயணத்தினுல் முக்தியைச் சொல்லுகிறது.

8. "உஹாஸ்ரீ ஜெவவக்ஷாஹ்யாஂ யயா வெ வக்ஷிணாஂமதிஃ। தயெவஜ்ஞாந கஜ-ாஹ்யாஂ வ்ராவ்யதெஃஸஂ ஜநாஃ-ஃநஃ॥" என்கிற வாக்யம் கர்மம் ஜ்ஞாநம் இரண்டும் சேர்ந்து மோக்ஷகாரண மென்கிறது.

9. "ஸ்ரஹ்விஜா வொ-திவஶ" என்பது முதலான வாக்யங்கள் பக்தியினுல் மோக்ஷ ப்ராப்தியைச் சொல்லுகின்றன.

10. "ஸகூஜெவ வ்ரவஞாய", "ஸவ-யஉ-ாநு வரித்யஜ்ய ஶாஂெகஂ ஶரணஂ வ்ரஜ।" என்பது முதலான ப்ரமாண வாக்யங்கள் ப்ரபத்தியினுல் மோக்ஷஸித்தியைச் சொல்லுகின்றன.

இப்படிப் பல விதமான மார்க்கங்களை ப்ரமாணங்கள் சொன்னுலும், "நாஹஂ வெஷெஃந-தவஸா", "ஹக்ஷ்ாகஷநந்யாஶக்யஃ" என்பது முதலான ஸ்ரீ கீதையினுல் உபப்ருஂஹிதமான "நாந்யஃ வஂயா அயநாய விஷ்யதெ" என்கிற ச்ருதியானது பக்தியைத் தவிர வேறு மோக்ஷோபாய மில்லையென்று சொல்வதாலும், "ஶரணஂ ஷாஂ வ்ரவஞா யெ யாநயொம விவஜி-தாஃ। தெஃவி ஶதந்தி கூஷ் யாஷிதக வெஷணவஂவஃ" என்றும் "ஸவ-யஉ-ாநு வரித்யஜ்ய" என்றும் அநேக ப்ரமாணங்கள் பக்தியோக நிரபேக்ஷயான ப்ரபத்தியினுலேயே மோக்ஷஸித்தியைச் சொல்வதாலும், இதை அநுஸரித்து, "ஹக்ஷ்ாவஶ உயாவாவி வ்ரவத்யாவாஉஹாஉதெ। வ்ராவெஷ்ாஹஂ நாந்யயா வ்ராவெஷ்ா உஉ கெஂகய-ஷ ஸ்ரீஸ்ஹிஃ" என்று ஸ்ரீ பாஞ்சராத்ர வாக்யம் பக்தி ப்ரபத்திகளைத் தவிர வேறு மோக்ஷோபாயமில்லையென்று சொல்வதாலும், பக்தி ப்ரபத்திகளே ஸாக்ஷாத் மோக்ஷ ஹேதுக்கள் என்றும், மற்றும் க்ஷேத்ரவாஸாதிகள் மோக்ஷோபாயமான பக்தி ப்ரபத்திகளில் ப்ரவர்த்திக்கச் செய்வதால் பரம்பரயா காரணங்கள் என்றும் நம் பூர்வாசார்யர்கள் தீர்மானித்தார்கள்.

இவ்வர்த்தம் "யாநி தீயஊாஹிவாகூாநி கஉஉகெஷதூவஸாணி அ| ஷாவகாநெூவதாநி ஸூஸஜூாநாம் ஜொஹகாநி அ॥" என்று புராணத்தில் வ்யக்தமாகச் சொல்லப்பட்டது.

இவ்விரண்டில் பக்தியானது புராண ச்ரவணாதிகளினல் உண்டான கேவல பக்தியல்ல. அது யமநியமாதிகளுடன் கூடி அஷ்டாங்க யோகமென்று ப்ரஸித்தமான பக்தி யோகம். அதுதான் பரபக்தியென்று சொல்லப்படும். இதைச் சிலர், "உஹநீய விஷயெ ஸ்ரீதி ஹக்திஃ" என்றும் சிலர் ஸ்ரீதிவஸுவஉ உநஸ யூாநம் ஹக்திரிதூஹியதெ" என்றும் "ஶ்ரவணம் கீதஉநம் விஷ்ணாஸ்மரணம் வாதஸெவநம் | கூஅஉநம் வநநம் தாஸூம் ஸவூ ஊாதநிவெதநம் ॥ இதி வஸவஸாவிஉதா விஷ்ணௌ ஹக்திஶ்சென்நவ முக்ஷணா" என்று பலபடியாகச் சொல்லப்பட்டிருந்தாலும், ச்ரவணார்ச்சந கீர்த்தநாதிகள் ப்ரீவாஹமாகும்படியான மஹநீய விஷயத்தில் செய்யப்படும் ப்ரீதி பூர்வமான நிரந்தர த்யாநமே பக்தி சப்தார்த்தமென்று ஸ்ரீ பாஷ்யகாராதிகள் தீர்மானித்திருப்பதால் பரஸ்பர விரோதமில்லை. பூர்ணமான ஸாத்ருச்ய மிருப்பதால் திருவடியைத் தாமரை யென்றே சொல்லுவது போல, ஸ்த்ரீகளுக்கும் ஜீவாத்மாக்களுக்கும் சேஷத்வ பாரதந்த்ர்யாதிகள் ஸமமாக இருப்பதால் இந்த பக்தியையே ஸ்த்ரீகளுடைய காம வார்த்தையாக ஆழ்வார்கள் அருளிச்செய்தார்கள். 'ராமாயண மென்னும் பத்தி வெள்ள' மென்று ஸ்ரீ அமுதனர் அருளிச்செய்தபடியே ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸ்ரீ ஸீதையினுடைய காம வார்த்தையினலும் இந்த பக்தியின் பர்வ க்ரமங்களே பேசப்பட்டன.

இவ்வாறு உபந்யஸித்து, கடைசியில் இங்கு இந்தப் பக்தியினுடைய பரபக்தி பரஜ்ஞாந பரமபக்தி யென்கிற பர்வ க்ரமங்களைச் சொல்லுகிறதாக ஆரம்பித்துக்கொண்டு, ஸ்ரீ ஸ்வாமி, ஒவ்வொரு பர்வ க்ரமங்களிலும் பூர்வாசார்யர்களுடையவும் ஆழ்வார்களுடையவும் ஸ்ரீ ஸீதையினுடையவும் அநுபவங்களுடைய ஒற்றுமையை அவரவர்கள் பாசுரங்களினல் எடுத்துக் காட்டி, கேட்டவர்கள் மனது மிகவும் உருகும்படி தெளிவாக உபந்யஸித்தார். அங்கு வந்திருந்த ப்ராஹ்மணர்களும் மற்றும் சில ஆஸ்திகர்களும் உபந்யாஸத்தைக் கேட்டு ஸந்தோஷித்துப் புகழ்ந்து பேசினர்கள்.

---

ஸ்ரீ:

## பண்டித ஸம்மாநங்கள்.

### (1) ஸ்ரீ ராமாநுஜாசார்யரும் ஸ்ரீ ஸ்ரீகண்டாசார்யரும்.

ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு ஸ்ரீ ஸ்ரீகண்டாசார்யர் என்னும் ஒரு பெரியவா பாஷ்யமொன்று செய்திருக்கிறார் என்பதும், அவர், அந்தப் பாஷ்யத்தில், ஸூத்ரங்கள் ஸகுண ப்ரஹ்மத்தையே ப்ரதிபாதிக்கின்றனவென்று உபபாதித்திருக்கிறார் என்பதும் வித்வாங்களுக்குத் தெரிந்த விஷயம். ஸ்ரீ ராமாநுஜாசார்யருடைய பாஷ்யமும் அம்மாதிரியே ஸூத்ரங்களை ஸகுண ப்ரஹ்ம ப்ரதிபாதகங்களாக விவரிக்கிறபடியால், இந்த இரண்டு பாஷ்யகாரர்களுக்குள் கால க்ருதமான பௌர்வாபர்யம் எப்படி இருக்கின்றது என்

பதை விசாரிப்பது வித்வ மனோ ரஞ்ஜகமாக இருக்குமென்று எண்ணி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபா நிர்வாஹகர்கள், நமது பண்டித ரத்நங்களை, அந்தரங்க பஹிரங்க ஹேது புரஸ்ஸரமாக அம்மாதிரி ஒரு விசாரத்தைச் செய்து அதை ஒரு வ்யாஸ ரூபமாக வெளிப்படுத்த வேணுமென்று ப்ரார்த்திக்கிறார்கள். அந்த ப்ரார்த்தனைக்கு இணங்க இஷ்டப்படும் பண்டிதர்கள், தமது இஷ்டத்தை வருகிற பங்குனி மாஸம் 8-ம் உக்கு முன்னதாகவே ஸபையின் கார்யதர்சிக்கு நியமிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். அந்த வ்யாஸங்களுள் சிறந்ததாயிருப்பதற்கு யதோசிதம் பாரிதோஷிகம் கொடுக்கப்படும். ப்ரதி ஸம்வத்ஸரம் நமது ஸபையின் வழியாக, ராவ் ஸாஹிப் பந்தர் ஸ்ரீ. உப ஸ்ரீநிவாஸ ராகவாசார்யரால் வித்வத் ஸம்மாநமாகக் கொடுக்கப்படும் 'ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமி பாரிதோஷிகம்' என்னும் பெயர் பூண்ட ஸம்மாநத் தொகையும் இந்தப் பாரிதோஷிகத்தில் சேர்த்துக்கொடுக்கப்படும். வ்யாஸத்தைப் பற்றிய நியமங்கள்:—

(1) வ்யாஸம் எழுதுபவர்கள் ஸ்ரீ வைஷ்ணவ பண்டிதர்களாக இருத்தல் வேண்டும்.

(2) விஷய விசாரம் நிர்த்திஷ்டமாயுள்ள அம்சத்தைப் பற்றி மாத்ரம் இருத்தல் வேண்டும். அதற்கு ஸம்பந்த மில்லாத வேறு குணதோஷ விசாரங்கள் ஸர்வதா அநபேக்ஷிதங்கள்.

(3) வ்யாஸத்தின் தைர்க்யம் பரமாவதி ஒரே பக்கம் எழுதின டிம்மித் தாளில் 20 பக்கங்களாவே இருத்தல் வேண்டும்.

(4) வ்யாஸம் எழுதப்படும் பாஷை மணி ப்ரவாளமென்று வ்யவஹரிக்கப்படும் ஸம்ஸ்க்ருதம் கலந்த தமிழாக இருத்தல் வேண்டும்.

(5) வருகிற விபவ வர்ஷம் சித்திரைமீ 30உக்கு முன்னதாகவே வ்யாஸங்கள் ஸபையின் கார்யதர்சியிடம் அனுப்பப்படவேண்டும்.

ஸபையின் நிர்வாஹக கமிடியாரால் வரிக்கப்படும் பண்டிதர்கள் இந்த வ்யாஸங்களின் குண தாரதம்யத்தை நிர்ணயிப்பார்கள். அந்த நிர்ணயத்தின் ப்ரகாரம் எது உத்க்ருஷ்டதமம் என்று ஏற்படுகிறதோ அதுவே பாரிதோஷிகார்ஹமென்று ஸபையின் கமிடியாரால் அங்கீகரிக்கப்படும்.

## (2) ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுடைய கவிதையும் தத்வ விசாரமும்.

இது, திருவல்லிக்கேணியில் இருக்கும் ஸ்ரீ.உப. கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி ஐயங்காரால் (திருவல்லிக்கேணி.) ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுடைய கவிதையையும் தத்வ விசாரத்தையும் பற்றிய வ்யாஸ விஷயமாகக் கொடுக்கப்படும் பாரிதோஷிகம். இதன் தொகை ரூ. 25—0—0. இது விஷயமாக வ்யாஸத்தை எழுத இஷ்டப்படும் பண்டிதர்களும், தமது இஷ்டத்தை பங்குனிமீ 8உக்கு முன்னதாகவே ஸபையின் கார்யதர்சிக்கு நியமிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். இதைப் பற்றிய நியமங்களும் பூர்வம் குறிக்கப்பட்டுள்ள வைகளே.

திருவல்லிக்கேணி,<br>ப்ரபவஹு மாசிமீ 30உ

கார்யதர்சி,<br>**சென்னை ஸ்ரீ வை. ஸி. ஸபை.**

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

---

யோந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

---

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**நமது பெரியோர்களின் முக்ய தர்மங்களுள் ஒன்று.**

இந்த ப்ரபஞ்சத்தின் ச்ரேயஸ்ஸானது, ஸத்யத்திலும் தர்மத்திலுய் தபஸ்ஸிலும் இன்னும் இம்மாதிரியான மற்றை ஸதாசாரங்களிலும் ப்ரதிஷ்டிதமாக இருக்கின்றதென்று வேத வாக்யங்கள் முறையிடுகின்றன. வேதங்களைப் பகவதாஜ்ஞை என்று ஒத்துக்கொள்ளாமல் இருக்கும் பாஹ்யர்களும் ஸத்யம் முதலான ஸதாசாரம் லுப்தமாகிவிட்டால் ஜகத்தின் ச்ரேயஸ்ஸுக்கு ஹானி நேர்ந்துவிடுமென்பதை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஜநங்களுக்கு இம்மாதிரியான நன்னடத்தையில் ப்ரவ்ருத்தி ப்ராயேண ஸ்வபாவத்தாலேயே ஏற்படுகின்றது என்பது உண்மையே. எவ்வித ஸம்ஸ்காரத்தையும் பெறாமல், கேவலம் வநேசரர்களாகவும் அதிமாத்ரம் அஜ்ஞர்களாகவுமுள்ள ஸாமாந்ய ஜநங்களுள்ளும் சிலர் மிகவும் தர்மிஷ்டர்களாக இருக்கிறார்கள். நாகரிக மேன்மையையும் ஜ்ஞாந ஸம்பத்தையும் பெற்றுள்ள ப்ரபுக்களுள்ளும் சிலர் மிகவும் அதர்மிஷ்டர்களாக இருப்பதையும் நாம் பார்க்கிறோம். ஆனால், சாஸ்த்ர ச்ரவணத்தாலும் ஸத் ஸங்கத்தாலும் அந்த ஸ்வபாவம் ஒருவிதமான ஸம்ஸ்கார விசேஷத்தை அடைகின்றது என்பது உண்டு. ஸ்வாபாவிகமாக இருக்கும் தார்மிக நோக்கம் சாஸ்த்ர ச்ரவணாதிகளைப் பெறாததால் மலிநமாகப் போவதும், ஸ்வபாவத்தால் காணப்படும் அதர்ம அபிநிவேசம் சாஸ்த்ர ச்ரவணாதிகளைப் பெற்று அதனால் தர்ம புத்தியாக மாறுவதும் ஸம்பாவிதம். இதை அறிந்தே பெரியோர்கள், மஹா ஜநங்களுக்கு வித்யா ஸ்தாநங்களையும் குருகுல வாஸாதிகளையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இம்மாதிரியான வ்யவஸ்தைகள் எந்தத் தேசத்தில் பரிஷ்காரமாக நடைபெற்று வருகின்றனவோ அந்தத் தேசத்தில் ச்ரேயஸ் வ்ருத்தியாகின்றது; எவ்வி

டத்தில் அவை அநாதரிக்கப்படுகின்றனவோ அவ்விடத்தில் ச்ரேயஸ் க்ஷயித்துக்கொண்டே வருகின்றது. இது உண்மையான ஸ்திதி.

நமது தேசத்தில் இந்தப் பரிபாடி எவவளவு வரையில் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது என்பதை விசாரித்துப் பார்த்தால், அது அவ்வளவு த்ருப்திகரமாக நடைபெற்று வரவில்லை என்றே தோன்றுகிறது. இங்லீஷ் ராஜாங்கத்தாரால் பெரிய வித்யாஸ்தாநங்களும் ப்ரபலமான பாடசாலைகளும் பஹுவாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது உண்மையே. ஆனல், நமது தேசத்தில் உள்ள ஜந ஸங்க்யையின் பாஹுள்யத்தைப் பார்க்கும்பொழுது, இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் வித்யாலயங்கள் அதிமாத்ரம் ஸ்வல்பங்கள் என்றே சொல்லவேண்டும். அந்த வித்யாலயங்களில் உபதேசிக்கப்படும் விஷயங்களும் கேவலம் ப்ரத்யக்ஷமாயுள்ள அர்த்த புருஷார்த்தத்தைப் பற்றியவைகளாக இருக்கின்றனவே தவிர, அப்ரத்யக்ஷமான தர்ம புருஷார்த்தத்தைப் பற்றியவைகளாகக் காணப்படவில்லை. அர்த்தத்தைப் பற்றிய உபதேசம் ஜகத்தின் ச்ரேயஸ்ஸுக்கு அவச்யம் அபேக்ஷிதமே; ஆனல், அது, தர்மத்தைப் பற்றிய உபதேசத்துடன் சேராமல் இருக்கும் பக்ஷத்தில், அது அவ்வளவு ச்ரேயஸ்கரமாக மாட்டாது என்பது பெரியோர்களுடைய அநுபவம். இப்பொழுது நமது வித்யாலயங்களில் உபதேசிக்கப்படும் விஷயம், தர்மோபதேசத்துடன் கூடியிருப்பதாகவே நாம் ஒத்துக்கொண்ட போதிலும், அதன் பலம் அநேக ஜநங்களுக்கு அப்ராப்தமாகவே இருக்கின்றது. க்ராமாந்தரங்களில் க்ருஷி ஜீவநம் செய்து வரும் ஏழைகளுக்கும் பத்தநங்களில் கூலிவேலை செய்து அஹரஹஹ கால க்ஷேபம் செய்துவரும் ஏழைகளுக்கும் பாடசாலைகளில் சேர்வது என்பதாவது பெரியோர்களுடன் ஸம்ஸர்க்கிப்பது என்பதாவது எவ்விதத்தில் நேரக்கூடும்? அம்மாதிரியான ஜநங்களுக்கு வித்யா க்ரஹணத்தில் ஸ்வயமாக ஆபிமுக்யமும் ஸம்பவிக்க மாட்டாதாகையால் நாம் கொடுக்கும் வித்யை அந்த ஜநங்களுக்கு எட்டாமலே நின்று விடுகின்றது. அது காரணமாக அவர்களுக்கு ஸ்வாபாவிகமாயுள்ள தர்மாதர்ம நோக்கங்கள் த்ருடப்படுவதற்கோ மாறுதல் அடைவதற்கோ அவகாசமே இல்லை. அப்படி எவ்வித ஜ்ஞாநப்பயிற்சியும் இல்லாமல் பெருந்தொகையான ஜநங்கள் மேன்மேலும் வ்ருத்தியாகிக்கொண்டு வந்தால், நமது தேசத்திற்கு நாம் எவ்விதத்தில் ச்ரேயஸ்ஸை ப்ரதீக்ஷிக்கக் கூடும்?

ஆனல், ஸகல ஜநங்களுக்கும் உபயோகிகளாக இருக்குமளவு வித்யாசாலைகளை ஏற்படுத்துவது என்பது துஸ்ஸாத்யமான விஷயமே. எல்லாரையும் நிர்ப்பந்தித்து வித்யா க்ரஹணம் செய்விப்பதும் ஸாத்யமன்று.

ச்ரமமான வித்யாசாலைகளை ஏற்படுத்துவதும் க்ரந்தபடன பூர்வமாக எல்லாருக்கும் வித்யா ப்ரதானம் செய்வதும் ஸாத்யமில்லாவிடினும், ஜனங்களுக்குள் அதிகாரி விவேசனம் செய்து அவரவர்கள் அதிகாரானுகுணமாக ஜ்ஞானப்ரதானம் செய்வது ஸாத்யமே. இப்பொழுது நமது வித்யாசாலைகளில் சொல்லிக் கொடுக்கப்பட்டு வரும் வித்யை ப்ராயேண அர்த்தவான்களாகவும் புத்திமான்களாகவும் இருக்கும் ஜனங்களின் அதிகாரத்திற்கு மாத்ரம் தகுந்ததாகும். அதிக புத்திசாலித்தனத்தை உடைத்தாயிராமலும் ஏழ்மை மிக்குள்ளவர்களாயு முள்ள ஜனங்களுக்கு அம்மாதிரி வித்யை அனபேக்ஷிதம். கேவலம் தர்ம புத்தியை வ்ருத்தி பண்ணக்கூடிய ஜ்ஞான ப்ரதானமே அவர்களுக்குப் போதுமானது. அந்த ஜ்ஞான ப்ரதானத்தை அதிக அர்த்த வ்யயமின்றிக்கும் அதிக ஆயாஸாதிகள் இன்றிக்கும் நாம் எல்லா ஜனங்களுக்கும் ஏற்பாடு செய்யக்கூடும். முற் காலங்களில், ஒவ்வொரு க்ராமத்திலும் பத்தனங்களிலும் புராண படனமென்றும் கதைகளென்றும் பஜனங்களென்றும் நாடகமென்றும் உபந்யாஸங்களென்றும் பலவித உபாயங்கள் அவலம்பிக்கப்பட்டு வந்தன. அவைகளைச் சரிவர நடத்துவதற்கு ராஜாங்கத்தாரும் அங்கங்கு இருந்த தர்ம ப்ரபுக்களும் ஸஹாயம் செய்து வந்தார்கள். அந்த உபாயங்கள் மஹா ஜனங்களுக்கு வைதுஷ்யத்தை உண்டுபண்ணாவிட்டாலும், தைவ பக்தியையும் பாப பயத்தையும் இன்னும் இம்மாதிரியான நற்குணங்களையும் வளர்த்து வந்தன. அது காரணமாகத் தேசத்தில் ச்ரேயஸ்ஸூம் பரவிவந்தது. இப்பொழுது அம்மாதிரியான தர்ம ப்ரவசனம் நின்றுபோய்விட்டது. புராண படனங்களும் நற்குணத்தை வ்ருத்தி செய்யக்கூடிய கதைகளின் ப்ரவசனங்களும் பெரும்பாலும் லுப்தங்களாகிவிட்டன. அவைகளின் ஸ்தானத்தில் வேறு ஒருஉபாயமும் ஏற்படுத்தப்படவில்லை. பஹூ ஜனங்கள் எவ்வித ஜ்ஞான வ்ருத்தியுமின்றிக்கே வளர்ந்து வருகிறார்கள். தைவ பக்தியும் பாப பயமும் குறைந்து கொண்டே வருகின்றன. முன்னூறு கோடி ஜனங்கள் வஸிக்கும் இத்தேசத்தில், இருநூறுகோடி ஜனம் இம்மாதிரி அநாதரிக்கப்பட்டு வந்தால் தேசத்திற்கு ச்ரேயஸ் எவ்விதத்தில் ஸம்பவிக்கும் என்பதைப் பெரியோர்கள் சற்று ஆலோசிக்கவேண்டும்.

இக்காலத்திய பாமர ஜனச் சிறுவர்களுடைய மனஸ்ஸில், பெரியோர்களிடம் கௌரவ புத்தியும் அடக்கமும் அவ்வளவாகக் காணப்படாமல் இருந்தால், அதெல்லாம், அவர்களுக்குக் கீழ்க்கூறப்பட்டது போன்ற ஸம்ஸ்காரங்கள் இல்லாததாலேயே என்று நாம் நினைக்கிறோம். தாமே ஸகலத்தையும் அறிந்தவர்களென்றும், இதற்கு முன் பஹூகாலமாகப் பெரியோர்கள் அனுஷ்டித்து வந்த ஆசாரணங்களெல்லாம் மௌட்ய ப்ரயுக்தங்களென்றும் நினைத்

துக்கொண்டு, அச்சிறுவர்கள், எவ்வித கூச்சமுமின்றிக்கே, அநேக க்ரம விரோதங்களான மார்க்கங்களில் ப்ரவ்ருத்திக்கத் துணிகிறார்கள். தேஹ பலத்தைக்கொண்டே ஸகல இஷ்டங்களையும் ஸாதித்துக் கொள்ளலாமென் னும் எண்ணம் அவர்களுடைய புத்தியில் த்ருடமாக ஏற்பட்டிருக்கின்றது. ஸமீப காலத்தில் பலவிடங்களில் நடைபெற்ற கலஹங்களில் ஸம்பந்தப்பட்ட வர்களுள் பெரும்பான்மையோர் இச்சிறுவர்களே. இம்மாதிரி ஜனங்கள் மேன்மேல் அபிவ்ருத்தராகி வந்தால் நமது தேசத்திற்கு எவ்விதத்தில் க்ஷேமத்தை எதிர்பார்க்கக்கூடும்? “ந வயஃஶாந்தோऽந்ந்ருத்யவெக்ஷிதாஂ க்ஷேமஃ”. நமது ராஜாங்கத்தார் இவர்கள் விஷயமாக அநேக சீர்திருத்தங் களையும் உபகாரங்களையும் செய்து வருகிறார்கள் என்பது உண்மையே. ராஜாங்கத்தாரை அநுஸரித்து நமது பெரியோர்களுட் சிலரும் அம்மாதிரி ப்ரவ்ருத்தியைச் செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஆனால் இவையெல்லாம் அவர்க ளுடைய சரீர ஸௌக்யத்தையும் இன்னும் மற்ற அம்மாதிரியான ஆநுகூல் யத்தையும் செய்யக்கூடியவைகளாக இருக்கின்றனவே தவிர, அவைகளுள் ஒன்றாவது அவர்களுடைய விவேக வர்த்தகமாகக் காணப்படவில்லை. விவே கத்தை வ்ருத்தி செய்யும் அம்சமே ப்ரதாநமாகையால் அதைப் பற்றி நமது பெரியோர்கள் விசேஷித்துக் கவனிக்க வேண்டுமென்பதுதான் நமது ப்ரார்த்தனை.

“கிம் க்ஷத்ர பஂயஸ்ய கலிர்நாவ ஸௌராஷ்ட்ராந்
ராஷ்ட்ராணி வா தைவநாவிதாநி ।
உத ஸ்வித் வாऽஸ்ய நவாநவாஸஃ
ஸாந்தவ்யாயோऽவஜீவநோகழ ॥”

என்று பூதேவியைப் பார்த்துத் தர்மராஜன் முன் ஒரு காலத்தில் ப்ரச்நம் செய்ததுபோல இப்பொழுதும் ப்ரச்நம் செய்யும்படியான காலம் ஸம்பவித்து விடுமென்றே நாம் பயப்படுகிறோம்.

* * * *

**விவாஹச் சீர் திருத்தம்.**

டாக்டர் முத்து லக்ஷ்மி ரெட்டியின் விவாஹச் சீர் திருத்த பர்யா லோசனையைப் பற்றி நாம் ஏற்கெனவே தீபிகையில் ப்ரஸ்தாவித்திருக்கி றோம். டில்லியில் சேரும் இந்தியா சட்ட நிரூபண ஸபை யிலும் இம்மாதிரி சீர்திருத்த ஸம்பந்தமான ஒரு பர்யா லோசனை செய்யப்பட்டு வருகின்றது. இந்த ஆலோசனை கள் சட்டமாகப் பரிணமித்து விட்டால், இப்பொழுது நாம் விவாஹத்தைச் சாஸ்த்ர முறைப்படி நடத்தி வருவது போல இனி நடத்து வது துஸ்ஸாத்யமாகி விடும். சாஸ்த்ர முறைமை தவறி நடப்பது நமக்கு ஸர்வதா அநிஷ்டமாதலால், இந்தச் சீர்திருத்த ஆலோசனைகளைச் சட்டங்க

ளாக வர வொட்டாமல் நாம் யதா சக்தி தடுக்க முயல வேண்டுவது நமது அவச்யமான கடமையாகும்.

இரண்டொரு மாஸ காலமாக அநேக ஆஸ்திக வித்வாங்களிட மிருந்தும் சாஸ்த்ரீயாசாரங்களில் பலமான விச்வாஸத்தை உடைய அநேக ஸாதாரண ஜநங்களிட மிருந்தும், இந்தச் சீர்திருத்த ஆலோசனைகளுக்கு விருத்தமாக நிஷேத பத்ரிகைகள் கணக்கற்று ராஜாங்கத்தாருக்குப் போய்க்கொண்டிருக்கின்றன. இவைகளைப் பார்த்து டாக்டர் முத்து லக்ஷ்மி அம்மாள், கொஞ்சம் வருத்த மடைந்தவராய் 'ஆத்மஹிதம் தெரியாமல் இப்படியும் ஜநங்கள் இருப்பார்களோ?' என்று வியப்புக் கொண்டு, ஹிந்து முதலிய பத்ரிகை மூலமாக மஹா ஜநங்களுக்கு ஹிதோபதேசங்களைச் செய்ய ஆரம்பித்திருக்கிறார். அந்த உபதேசங்களையும் அவ்விடத்தில் உபபாதிக்கப் பட்டுள்ள ஹேதுக்களையும் நாம் நிராக்ரஹமான மநஸ்ஸுடன் படித்துப் பார்த்தோம். அவைகளுள் ஒன்றும் நமக்கு ஒரு அம்சத்திலும் த்ருப்தியை ஜநிப்பிக்கவில்லை. நாம் ஏற்கெனவே விஜ்ஞாபித்துக் கொண்டிருக்கிறபடி அந்த அம்மாள் விவாஹ மென்பது கர்ப்பாதாநத்தைக் குறிக்கின்றதென்று ப்ரமித்தே வாதிக்கிறதாக நமக்குத் தோன்றுகிறது. பால்யத்தில் விவாஹம் செய்யப்படுவதால் பால்யத்திலேயே ஸ்த்ரீகளுக்கு ப்ரஜை ஜநிக்கின்றது என்றும், அப்படி ப்ரஜைகள் ஜநிப்பதால் சிசுவுக்கும் மாதாவுக்கும் அநாரோக்யாதிகள் ஸம்பவிக்கின்றன வென்றும், அதனாலேயே நமது தேசத்தில் சிசு மரணமும் ஸ்த்ரீகளுக்கு பலக்குறைவும் அதிகமாகக் காணப்படுகின்றன வென்றும் இத்யாதி ரீதியிலேயே அவர் வாதிப்பதை நாம் பார்க்கிறோம். இது வஸ்து ஸ்திதியை அறிந்தவர்கள் சொல்லும் வார்த்தையாகுமோ? விவாஹம் என்பது கேவலம் பாணிக்ரஹணத்தை மாத்ரம் குறிக்கின்றது. கர்ப்பாதாநம் என்பது தம்பதிகளுக்கு யுக்தமான வயது வந்த பிறகே செய்யப்படுவது. ஆகையால் அந்த அம்மாவால் வர்ணிக்கப்பட்டுள்ள தீமைகளொன்றுக்கும் விவாஹம் காரணமாக மாட்டாது. இப்பொழுது கர்ப்பாதாநம் செய்யப்படும் காலம் யுக்தமான கால மன்றென்றும், அதை நிர்த்திஷ்டமான ஒரு வயது வந்த பிறகே செய்ய வேண்டுமென்றும் ஒரு விதமான வ்யவஸ்தையை ஏற்படுத்த ப்ரயத்நம் செய்யப்படும் பக்ஷத்தில் அது யுக்தி யுக்தமாக இருக்கலாம்; இப்பொழுது செய்யப்படும ப்யத்நத்தில் நாம் எவ்வித யுக்தியையும் காண்கிறோமில்லை.

தவிரவும் இக்காலத்தில் ஜநங்கள் எவ்வித குணதோஷ விசாரத்தையும் செய்யாமலே, கேவலம் தமோகுண ப்ரயுக்தமான ஆலஸ்யத்தால், சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டுள்ள நியமங்களுள் பலவற்றைக் கடந்து, மனம் போனபோக்கில் நடக்க ஆரம்பித்துவிட்டார்கள். நமக்குத் தெரிந்த ஸ்வல்ப காலத்துக்குள் கணக்கற்ற ஆசாரங்கள் விபரீதங்களாக மாறிவிட்டன. இன்னும் ஸ்வல்ப காலத்துக்குள்ளாகவே மற்றை ஆசாரங்களும் மாறிவிடும் என்பதில் ஸந்தேஹமில்லை. ஜநங்களுடைய நடவடிக்கை முழுவதும், நமது இக்காலத்திய சீர்திருத்தக்காரர்கள் அபேக்ஷிக்கிறபடியே ஒருவருடைய ப்ரயத்நமுமின்றிக்குச் சீக்ரத்தில் மாறுதலை அடையுமென்று ஊஹிக்கப் பலமான காரணங்கள் இருக்கின்றன. ஜகத்தின் ஸ்திதி இவ்விதம் இருக்கையில், இக்

தச் சீர்திருத்தக்காரர்கள் என் வீணில் தங்களைப் பரிச்ரமப் படுத்திக் கொள்ள வேண்டும்? தைவமென்று ஒன்று உண்டென்றும், நமது சாஸ்த்ரங்களெல்லாம் அந்தத் தைவத்தின் ஆஜ்ஞையென்றும் விச்வஸித்து, அந்தச் சாஸ்த்ர விதிப்படி நடக்க முயலும் ஸ்வல்ப ஜனங்களின் அந்த:கரணத்தை வருத்துவதைத் தவிர்த்து வேறு ஒரு பலத்தையும் இவர்களுடைய ப்ரயத்நம் ஸாதித்துக் கொடுக்குமென்று நமக்குத் தோன்றவில்லை. இம்மாதிரி நிஷ்பலமாகவும் கேவலம் ஸாது ஜனங்களுடைய ஹ்ருதயத்திற்கு வ்யதையை உண்டுபண்ணக்கூடியதாகவும் இருக்கும் இந்த முயற்சியிலிருந்து இவர்கள் உபரதராகமாட்டார்களா வென்று நாம் ஔத்கண்ட்யத்துடன் எதிர்பார்த்து நிற்கிறோம்.

* * * *

**ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்**

நமது ஸபையின் அத்யக்ஷராயிருக்கும் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், நான்கு வர்ஷ காலம் முன்னதாக மதிராஸ் ஹைகோர்ட் ஜட்ஜாக ராஜாங்கத்தாரால் வரிக்கப்பட்டு, இந்த நாலு வர்ஷங்களாக அவர் அந்த ஆஸ்தானத்தை அலங்கரித்து வந்தார் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்பொழுது ஏதோ ஒரு காரண விசேஷத்தால் அவர் அந்த ஸ்தானத்தை த்யஜித்து விட்டார் என்று நாம் அறிகிறோம். அப்படி அவர் அதை த்யஜிக்கும்படி ஸம்பவித்தது நமக்குச் சோகத்திற்குக் காரணமாகின்றது. ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸம்பந்தப்பட்ட வரையில், அவருக்கு இந்த ஸ்தானத்தை வைத்துக் கொள்வதால் ஒருவித அர்த்தம் உண்டாகின்றது என்பதாவது, இதை த்யஜிப்பதால் ஒரு வித அநர்த்தம் உண்டாகின்றது என்பதாவது இல்லை. ஆனால், மஹா ஜனங்களுக்கு அவர் அந்த அதிகாரத்தை வஹித்து வருவது பஹு ப்ரகாரங்களில் ச்ரேயஸ்கரம். துஷ்கர்மங்களில் ப்ரவ்ருத்திக்கும் துஷ்டர்களை நிக்ரஹம் செய்து, ஸாது ஜனங்களெல்லாரையும் ஸம்ரக்ஷித்து, அதுவழியாக ந்யாய மார்க்கத்தை ஸ்தாபிப்பதன்றோ அந்த ஸ்தானத்தின் முக்ய தர்மம்? அப்படிப்பட்ட தர்மத்தை அங்கமாக உடைய அந்த ஸ்தானத்தை வஹிப்பவர்களுக்குச் சட்டத்தில் நிஷ்க்ருஷ்டமான ஜ்ஞானமும், எவ்வித வைஷம்ய புத்தியும் இல்லாமல் இருக்கும் தன்மையும் அபேக்ஷிதமாயிருப்பதுடன், தைவமென்று ஒன்று உண்டு என்னும் ஆஸ்திக்ய புத்தியும், தீநர்களிடத்தில் வாத்ஸல்யமும், தவறி நடக்கும் ஜனங்களிடத்தில் ஹார்த்தமான கருணையும் அவச்யம் அபேக்ஷிதங்கள். இந்தக் குணங்களெல்லாவற்றையும் உடைத்தாயிருக்கும் வ்யக்திகள் துர்லபராகையால், அவைகளால் நிறைந்துள்ள ஒருவர் அந்த ஸ்தானத்திலிருந்து விலகுகின்றார் என்பது அம்மாதிரியான குணச்சேர்க்கையை ஆதரிக்கும் ஜனங்களுக்குச் சோகத்தை ஜநிப்பிக்காமல் இருக்குமோ? ஆனால், 'தைவ க்ருதமாய் சேர்வதெல்லாம் நன்மையின் பொருட்டே ஆகும்' என்னும் ந்யாயப்படி, இது ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஐயங்காருக்கும் அவர் வழியாக மஹா ஜனங்களுக்கும் ச்ரேயஸ்ஸின் ஆதிக்யத்திலேயே ப்ரபவிக்கும் என்று நாம் நம்பியிருக்கிறோம்.

* * * *

**காலஞ்சென்ற மஹா மஹோபாத்யாய பண்டித வெங்கடஸுப்பா சாஸ்த்ரிகள்.**

சென்ற மார்கழி மாஸம் 20-ந் தேதி வியாழக்கிழமை தினம், பஹு காலமாக மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருத பாடசாலையின் அத்யக்ஷரா யிருந்த மஹா மஹோபாத்யாய பண்டித வெங்கடஸுப்பா சாஸ்த்ரிகள் காலம் சென்றார் என்பது ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். பண்டைக் காலத்திய பண்டித கோஷ்டியைச் சேர்ந்தவர்களுள் அவர் ஒருவர். ப்ரஸித்தரான திருவிசை நல்லூர் மஹாமஹோபாத்யாய ராமஸுப்பா சாஸ்த்ரிகளிடம் பூர்வ மீமாம்ஸையை அப்யஸித்து, அந்தச் சாஸ்த்ரத்திலும் அத்வைத வேதாந்தத்திலும் பூர்ண ஜ்ஞாநத்தைப் பெற்றிருந்தார். சாஸ்த்ர ஜ்ஞாநத்துடன் ஆஸ்திக்யமும் தர்மாநுஷ்டாநமும் அவரிடம் குடிகொண்டிருந்தன. மிகுந்த உபசாந்தியுடன், தமக்கு ப்ராப்தமாயிருந்த ப்ரவசநரூபமான தர்மத்தை எவ்வித லோபமும் இல்லாமல் நிறைவேற்றிக்கொண்டு, பண்டித ஸமூஹத்திற்கு அந்யாத்ருசமான பூஷணமாகவும், வேத மதஸ்தர்களுக்கு த்ருடமான அவலம்பமாகவும், ஜந ஸாமாந்யத்திற்கே ஒருவித ச்ரேயோ ஹேதுவாகவும் இருந்த இந்த மஹாந் இவ்விடமிருந்து திரோதாநமடைந்து விட்டது பற்றி நாம் மிகவும் சோகிக்கிறோம்.

* * * *

**ஸ்ரீ. வை ஸி ஸபையின் வார்ஷிக மஹா ஸங்கம்.**

சென்ற மார்கழி மாஸத்திய ஸஞ்சிகையில், இவ்வர்ஷத்திய ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கம் கோயம்புத்தூரில் நடைபெறுமென்றும், அதைப் பற்றிய மற்றை அம்சங்கள் சீக்ரத்தில் வெளிவருமென்றும், ஸ்ரீ. வை. ஸி. ஸபையின் கார்யதர்சியால் ஸப்யர்களுக்கு ஒரு விஜ்ஞாபநம் செய்யப்பட்டிருந்தது. அப்ரதீக்ஷிதங்களான பல அஸௌகர்யங்களால் அந்த விஜ்ஞாபந ப்ரகாரம் நடந்து கொள்ள ஸாத்யமில்லாமல் போய் விட்டது. கோயம்புத்தூரிலும் இது விஷயமாக ஸ்வல்ப விளம்பம் ஏற்பட்டிருந்ததாகவும், இப்பொழுது அந்த விளம்ப ஹேதுக்கள் நிவ்ருத்தமாகி விட்டனவென்றும் நாம் அறிகிறோம். சீக்ரத்தில் ஸங்கத்தின் விசேஷித்த அம்சங்களெல்லாம் நிர்ணயிக்கப்பட்டு யதாக்ரமம் ஆஹ்வாந பத்ரிகைகளும் அடுத்த ஸஞ்சிகை வழியாக எல்லாருக்கும் அனுப்பப்படும். விமர்சக் குறைவினாலாவது வேறு காரணங்களாலாவது ஏதாவது ந்யூநாதிரேகம் நேர்ந்தபோதிலும், நமது ஸுஹ்ருத்துக்களெல்லாரும் அதை க்ருபையுடன் க்ஷமித்துக்கொண்டு ஸ்ரீ சரண்யனுடைய கைங்கர்யரூபமான இந்தக் கார்யத்தைத் தலைக்கட்டிவைக்க வேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.